Regiesrted at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 10 ஆம் நாள் | ரவி அவ்வல் 14 | (26-8-61) | சனிக்கிழமை | இதழ் 166

வாசனை உலகிலே ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களுர்–2. மதுரை

# குஸுமா ராஜரத்ன

## விடுதலையானர்

## சொந்த வேண்டுகோளின் மீது பிரதமர் நடவடிக்கை

### ஜனப்பிரதிநிதிகள் சபையில் சபை முதல்வர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

**இன்று காலை 10 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் கூடியபோது, ஸ்ரீமதி குஸுமா ராஜரத்தின தமது வேண்டுகோளின்படி விடுதலை செய்யப்பட்டிருப்பதாய்ப் பிரதமரிடமிருந்து செய்தி கிடைத்திருப்பதாகச் சபைமுதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா அறிவித்தார்.**

"ஸ்ரீமதி ராஜரத்தின தனது சொந்த வேண்டுகோளின் படியே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்" என்றும் சபை முதல்வர் அறிவித்தார்.

திரு. கெனமன்: அவர் தடுப்புக் காவலில் இருந்தாரா? தடுப்புப் காவல் உத்தரவு வாபஸ் பெறப்பட்டதா?

நிதிமந்திரி: (தலையை ஆட்டிக்கொண்டே) "ஆமாம்"

பொலிஸ் மான்யம்மீது திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் கூறியதாவது:

"குஸுமாவின் விடுதலையை முன்னிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் இச்சபையில் ஆஜராகாமல் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்படக் கூடாது. அங்கத்தினர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் சபாநாயகர் முயற்சி எடுத்துக் கொள்வதாய்த் தெரியவில்லை. நான்கூட இச்சபையில் பிரசன்னமாயிருப்பதிலை தடுக்கப்பட்டேன். சபாநாயகரின் மீது ஒரு புத்தகத்தை வீச முயன்றதாக என் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. பொதுவாக நான் அவ்விதம் நடந்து கொள்வதில்லை.

நான் வழக்கமாக எனது முஷ்டியையே உபயோகிப்பேன். ஜோமோ கென்யாட்டா விடுதலைசெய்யப்பட்டிருப்பதை முன்னிட்டும் நான் மகிழ்ச்சியடைகிறேன். 1929-ம் ஆண்டில் அவருடன் நான் லண்டனில் வேலை செய்திருக்கிறேன்." "ஹைட் பார்க்" கில் அவருடன் ஒரே மேடையில் பேசியிருக்கிறேன்.

## "தடுப்புக்காவலில் வைக்கும்படி நான் யாரையும் கேட்கவில்லை"

—குஸுமா ராஜரத்ன

கொழும்பு, வெள்ளி

**பிரதம மந்திரியினதும் பார்லிமெண்டரி காரியதரிசியினதும் உத்தரவின் பேரில் இரண்டு மாத காலத்துக்கு மேலாகத் தடுப்புக் காவலில் இருந்த பின்னர் மீண்டும் பார்லிமெண்டில் வந்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் என விடுதலையடைந்த ஊவா பரணகமுவ எம். பி. திருமதி குஸுமா ராஜரத்ன பார்லிமெண்டில் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியதாவது:- "நேற்றுக் காலை 9 மணிக்கு நான் விடுதலை செய்யப்பட்டதும் உடனே எனது கணவரைச் சந்திக்கும் பொருட்டு அவர் இருக்கும் சிறைக்குச் சென்றபின், நேரடியாகப் பார்லிமெண்டுக்கு வந்தேன். எனது வேண்டுகோளின் பேரிலேயே நான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டேன் என, ஆகஸ்ட் 22ம் திகதி பார்லிமெண்டரிக் காரியதரிசி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார். நான் ஒரு போதும் இவ்விதம் பார்லிமெண்டரி காரியதரிசியிடமோ, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமோ, பிரதம மந்திரியிடமோ வேண்டிக்கொள்ளவில்லை. நேர்மையும், புத்திசாதுர்யமும் நிறைந்த பார்லிமெண்டரி காரியதரிசி போன்ற ஒருவர் இவ்விதம் நான் எனது வேண்டுகோளின்படியே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டேன் எனத் தெரிவித்திருப்பதை அறிய எனக்குப் பெரிதும் ஆச்சரியமாக இருக்கிறது. அறிவுள்ள எந்த ஒரு ஆணாவது பெண்ணாவது தம்மைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வாரா? இவ்வித தவறான அறிக்கைகளை இனிமேல் அவர் வெளியிடமாட்டாரென நம்புகிறேன்.

நீதிபதியின் உத்தரவின்படி எனது கணவர் பதுளை கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட இருந்தார். ஆனால் அவசரகால அதிகாரத்தின்படி அரசாங்கம் அவரை கொழும்பு கோர்ட்டில் ஆஜர் செய்தது. பதுளை கோர்ட்டில் கூடியிருந்த வெலிமடை, ஊவா பரணகமவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் இதனால் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள். நான் தடுப்புக் காவலில் இருந்த சமயம் எனது வீடு பொலிஸாரால் காவல் செய்யப்பட்டுவந்தது. நான் வீட்டில் தனியே இருந்தேன். இதனால் ஆண் பொலிஸ் கான்ஸ்டபிள்களை அகற்றிவிட்டு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களை காவல் புரிய அனுப்புமாறு பிரதம மந்திரிக்கு தந்திச் செய்தி அனுப்பியிருந்தேன். ஆனால் இரு பொலிஸ் மேட்ரன்மார்கள் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் சென்ற இடமெல்லாம் என்னைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்கள்."

## சோஷலிஸ நாடுகளுக்கே ரப்பர் ஏற்றுமதி

கொழும்பு, வெள்ளி

கூட்டுறவு மொத்த விற்பனவுள் தாபனம் ரப்பர் சம்பந்தமான வர்த்தக ஒப்பந்தங்களை வெளிநாடுகளுடன் செய்தவுடன், முதலில் சோஷலிஸ நாடுகளுக்கே ரப்பர் ஏற்றுமதி செய்யும்.

தற்பொழுது தனிப்பட்ட வர்த்தகர்கள் அதிகமாக ரப்பர் ஷீட்டுகளை இந்த நாடுகளுக்கே ஏற்றுமதிசெய்து வருகிறார்கள்.

இலங்கையிடமிருந்து அதிக ரப்பரை வாங்கும் நாடு ரஷ்யா தான். இவ்வருடம் மேமாத முடிவுக்குள் 4 கோடி ருத்தல் நிறையுள்ள ரப்பரை இலங்கையிடமிருந்து ரஷ்யா வாங்கியுள்ளது.

## சிங்கப்பூர்–மலாயா ஐக்கியம் நிச்சயமானது

சிங்கப்பூர், ஆக. 25

1963-ம் ஆண்டில் சிங்கப்பூரும், மலாயாவும் ஐக்கியமாவது நிச்சயம் என சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான் கூறினர்.

## 'எவரஸ்டில் சீன உரிமை கொண்டாட முடியாது'

—நேபாள மன்னர்

நேபாளம், ஆக. 25

எவரஸ்ட் சிகரத்தில் சீன உரிமை கொண்டாடுவதை நாம் விட்டுக்கொடுக்க முடியாது என நேபாள மன்னர் திரு. மகேந்திரா கட்மண்டுவில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் கூறினர்.

## லோகசபை ஆமோதித்தது

புதுடில்லி, ஆக. 25

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தை லோகசபை 3 நாள் விவாதத்திற்குப்பின் நேற்று ஆமோதித்தது.

## "தமிழரசு எம். பி.க்கள் விடுதலையை ஆதரிக்கிறேன்"

### பார்லிமெண்டில் திரு. விஜயசிங்கா

கொழும்பு, வெள்ளி

தமிழரசுக்கட்சி எம். பி.களை விடுதலைசெய்வது தேசிய முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினை என்று திரு. பிலிப் குணவர்த்தன கூறியதை நான் ஆதரிக்கிறேன்" என அரசாங்கக் கட்சி எம். பி. யான திரு. விஜயபாகு விஜயசிங்கா இன்று பார்லிமெண்டில் கூறினர். அவர் தொடர்ந்து கூயதாவது:

கட்சிவேற்றுமையின்றி சகலரும் ஒன்றுசேர்ந்து மொழிச் சிக்கலுக்கும், சிறுபான்மையினர் பிரச்சினைக்கும் உடனடியாக முடிவு காணவேண்டும். நாட்டில் உள்ள சகல பகுதி மக்களும் அங்கம்பெறக்கூடிய விதத்தில் பார்லிமெண்ட் அமைவதற்கு, தமிழரசுக் கட்சி எம். பி.க்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்."

## இந்தியாவைப் போல் நடுநிலைமையே எங்கள் கொள்கை

### டாக்டர் செட்டி ஜகன் அறிவிப்பு

லண்டன், ஆக. 25

இந்தியா, கான போன்ற நாடுகளைப் போல் பிரிட்டிஷ் கயானவும் நடுநிலைமைக்கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாய் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டாக்டர் செட்டி ஜகன் கூறினர்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தாம் மந்திரிசபை அமைக்கப்போவதாயும் அவர் தெரிவித்தார். அடுத்தமாதம் 31-ம் தேதி மேற்கிந்திய தீவுகளுக்குச் சுதந்திரம் கிடைப்பது போல் கயானவுக்கும் சுதந்திரம் கிடைக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாய் டாக்டர் ஜகன் தெரிவித்தார்.

டாக்டர் ஜகனின் நிதானமான அக்கறையைக் கண்டு உற்சாகமடைவதாய் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். டாக்டர் ஜகனின் பொருளாதாரக் கோரிக்கை ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

## தண்ணீர்த் திட்டக் கடன் நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும்

### மாநகர சபை ஆணையாளருக்கு கணக்காளர் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

ஏற்கெனவே அபாயகரமான நிலையிலுள்ள இச்சபையின் நிதிநிலைமையை நீண்டகாலம் செலவுப்பொறுப்புள்ள தண்ணீர்த் திட்டக்கடன் மேலும் அதிக மோசமாக்கிவிடும் என யாழ்ப்பாண மாநகசபைக் கணக்காளர் ஆணையாளருக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனினும் புதிய மாதிரிச்சந்தை அமைப்பது, மின்சார விநியோகமுறை ஆகியனவற்றுக்குத் தேவைப்படும் 10 லட்சம் கடன் மிக அவசியமென ஆலோசிக்கம்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாநகரசபை நிதிநிலைமை அறிக்கையை மேலும் தெளிவாக விபரிக்கும் பொருட்டு இவ்வறிக்கையைக் கணக்காளர் இப்பொழுது சமர்ப்பித்துள்ளார்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருக்கும் முக்கிய விஷயங்களாவன:-

தண்ணீர்த் திட்டக் கடன் ரூ. 2,197,684 ஆகும். இது முதலும் வட்டியுமாக 40 வருடங்களில் ரூ. 3,999,790-68 சதமாகக் கட்டவேண்டும். ஏற்கெனவே அபாயகரமான நிலையிலுள்ள இச்சபையின் நிதிநிலைமையை மேலும் அதிக மோசமாக்கிவிடும் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

புதிய மாதிரிச்சந்தை அமைப்பது, மின்சார விநியோகம் மலகூட மேற்பரப்பு, வடிகாலமைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு ரூ. 30 லட்சம் கடனுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நவீன மாதிரிச்சந்தை வருவாயைக் கொடுக்க கூடியதொன்ருகும். சந்தை இயக்கத் தொடங்கிய பின்னர் நல்ல

(8ம் பக்கம் பார்க்க)






## திருமண அழைப்பு

**சண்முகநாதன் — ஜயவதி**

முதலியார் வி. முத்துத்தம்பி அவர்களின் மகன் செல்வன் சண்முகநாதன் அவர்களுக்கும் (Flying Officer) திரு. இராஜரத்தினம் அவர்களின் மகள் செல்வி ஜயவதி (ஆசிரியை, யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிமடம்) அவர்களுக்கும் 28 - 8 - 61 திங்கட்கிழமை காலை திருமணம் நடைபெறும். அன்று மாலை 5 மணி தொடக்கம் மணமகன் இல்லத்தில் வரவேற்பு வைபவம் நடைபெறும். அன்பர்களையும், உறவினர்களையும் இவ்விருந்து வைபவத்திற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"தமிழகம்",
பாவட்டங்காடு,

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.



### வாடகைக்கு

வீடு — சகல வசதிகளுடன் கூடிய மூன்று அறைகளுள்ள வீடு சுண்டுக்குளியில் பள்ளிக்கூடங்களுக்கும், கச்சேரிக்கும் கிட்டியதாகவும் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: 78, கண்டி வீதி, சுண்டுக்குளி.



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.








### மலிவு விற்பனை

ஜூலியர் காஷ்மீர்சேலைகள் 500க்கு மேற்பட்ட டிசைன்களில் றவுக்கைத் துண்டுடன் சாதாரண விலை ரூ. 13 – 50 விற்பனை விலை ரூ. 9 – 50 டயரும்ஸ்-யாழ்ப்பாணம்.


### இளைஞர் பொருளாதார முன்னேற்ற அபிவிருத்தி சங்கம்
### வாணிபக் கல்வி தராதரப் பத்திரம்

(1) 1962ம் ஆண்டு ஆவணி மாதம் நிகழவிருக்கும் வாணிபக் கல்வி தராதரப் பத்திர பரீட்சைக்கு கற்பிப்பதற்காக யாழ்ப்பாண **தொழிற் கல்வி நிலையத்தில்** வகுப்புக்கள் 1961ம் ஆண்டு புரட்டாசி மாதம் 15ந் திகதி ஆரம்பமாகும்.

(2) கீழ்வரும் பாடங்கள் கட்டாய பாடங்களாக கற்பிக்கப்படும்.

(1) வர்த்தக எண்கணிதம்
(2) வர்த்தகம்
(3) கணக்கியல்
(4) சுருக்கெழுத்து
(5) தட்டச்சு
(6) தமிழ்மொழி
(ஆ) பாடத்திட்டம்
(7) ஆங்கிலம்

(3) இப்பாடங்கள் பொதுத் தராதர (G. C. E. ORD. Level) வகுப்புத் திட்டங்களுக்கு அமைந்ததாகவிருக்கும் வகுப்புக்களில் சேர விரும்புவோர் **புரட்டாசி மாதம 1ம் திகதிக்கு முன்** தங்கள் மனுப் பத்திரங்களை இரண்டு புதிய நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுக் கட்டணம் 2 ரூபா உடனும் அனுப்புதல் வேண்டும்.

(4) அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் மாதச் சம்பளமாக ரூபா 5 மாதத் தொடக்கத்தில் கட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை நடாத்தப்படும் நேரத்தில் கட்டப்படுதல் வேண்டும். மாணவர்கள் தங்களுக்குத் தேவையான குறிக்கப்பட்ட பாடப் புத்தகங்களையும், உபகரணங்களையும் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(5) வகுப்புகள் தொழிற் கல்லூரியில் கிழமைநாட்களில் இரவு 6 மணிக்குத் தொடங்கி நடத்தப்படும்.

(6) மாணவர்கள் தொழிற் கல்லூரியின் அதிகாரிகளால் அமைக்கப்பெறும் விதிகளுக்கு அமைந்து நடத்தல் வேண்டும்.

T. Samuel Thambiah
பதிவுகாரர்.

Secretary,
Youth Council,
426, K. K. S. Road,
Jaffna. 25-8-61.


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# இளைஞர்கள் சேவா உணர்ச்சிகொள்ளவேண்டும்
## முஸ்லிம் முன்னேக்கு முன்னணி கூட்டத்தில் அறிவுரை

மன்னர், வெள்ளி

"சேவைக்காகப் பிறந்தவர்கள் அமரர்களே, இளைஞர்கள் சேவா உணர்ச்சியோடு செயல்பட்டுச் சமூக ஊழல்களைக் களைந்தெறிய முன்வரவேண்டும். மனிதன் சேவை செய்வதன் மூலம் பொறாமை, தன்னலம் முதலியவற்றை அகற்றி, பொதுநலமாம் பெருநோக்குக் கொண்டு தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தி நாட்டிற்கான ஓர் எதிர்காலத் திட்டத்தையே உருவாக்கித் தொழில் படச் செய்கிறன். எனவே, சமுதாய முன்னேடிகளான இளைஞர்களுக்கு வாழ்க்கை பக்குவமடையவும் நாட்டின் நிலை முன்னேறவும் சேவா உணர்ச்சி இன்றியமையாதது."

இவ்வாறு மன்னர் லேக்வீதி முஸ்லிம் முன்னேக்கு முன்னணியின் மகாசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் அதன் தலைவர் ஜனப் யூ. எம். கவுது கூறினர்.

### புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலய மண்டலாபிஷேகம்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மண்டலாபிஷேக தினத்தை முன்னிட்டு 26-8-61 இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திரு. ச. இராசரத்தினம் அவர்களின் உபயமாகச் சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து இரவு திருவிழாக் காட்சியும் நடைபெறும்.

## ஆசிரியர் கோஷ்டி யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பிரயாணம்

மத்துகாமம், வெள்ளி

மத்துகாமம் அரசினர் மத்திய கல்லூரியின் தமிழ்-சிங்கள ஆசிரியர்களைக்கொண்ட குழாம் ஒன்று யாழ்ப்பாணப்பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக 24-ந் தேதியன்று புறப்பட்டுள்ளது.

இந்த கோஷ்டி பரந்தன் சோடா தொழிற்சாலை, உப்புக்குளம், நிலாவரை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, கீரிமலை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினதீவு ஆகிய இடங்களைப் பார்வையிடுவார்களெனத்தெரிகிறது.

இந்த விதமான சுற்றுப்பிரயாணம் தமிழ்-சிங்கள இன ஐக்கியத்திற்கு உதவுமெனவும் இவர்கள் கருதுகிறார்கள்.

## இந்தியாவின் முதல் எண்ணை கப்பல்

புதுடில்லி, ஆக. 25

இந்தியாவின் முதலாவது எண்ணைக் கப்பல் நேற்று சேவைக்கு விடப்பட்டது. "ஆதி ஜயந்தி" எனப் பெயரிடப்பட்ட இக் கப்பல் 33,000 டன் நிறையைக் கொண்டது.

## சனிக்கிழமைகளில் கி. ச. கூட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

25 அங்கத்தவரைக் கொண்ட கட்டைவேலிக் கிராமச்சங்கம் இதுவரை கிழமை நாட்களில் காலை 10-30 மணிக்கு ஆரம்பித்து நடைபெற்று வந்தது. ஆனல் இதில் அங்கத்துவம் வகிக்கும் ஒரு நியாயவாதியும் ஐந்து ஆசிரியரும் ஏழு வர்த்தகரும் விடுக்கும் வேண்டுகோளின் பேரில் இனிமேல் எல்லோருக்கும் வசதியாக, சனிக்கிழமை பின்னேரங்களில் 4 மணிக்குக் கூட்டங்களை நடத்தத் தலைவர் உத்தேசித்துள்ளார்.

## நெல்லியடியில் நிறுவைகள் பரிசோதனை

உடுப்பிட்டி, வெள்ளி

நிறுவைகள் அளவைகள் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துகிறர்களா என்பதைப் பரிசோதனை செய்வதற்காக இன்று அரசாங்க பரிசோதகர்கள் சிலர் நெல்லியடியிலுள்ள பல கடைகளுக்கும் திடீர் விஜயம் செய்து பரிசோதனை செய்தனர். இவ்வாறன பரிசோதனைகள் எதிர்பாராத விதமாக எச்சந்தர்ப்பத்திலும் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

## பெல்கிரேட் அருகில் ரயில்கள் மோதல்
### 15 பேர் பலி

பெல்கிரேட், ஆக. 23

பெல்கிரேட்டுக்குவடமேற்கே 46 மைல் தூரத்தில் நோவிசாத் அருகில் இரு ரயில்கள் மோதிக்கொண்டதால் 15 பேர் மாண்டனர்.


பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

பட்டு நூல்

# யானை பீடி

★ குணம் மணம் நிறைந்தது யானை பீடி ஒன்றே!

★ இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும் தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டதும் யானை பீடி ஒன்றே!

★ எல்லோரும் விரும்பிப் புகைப்பதும் எங்கும் சுலபமாகக் கிடைக்கக் கூடியதும் யானை பீடி ஒன்றே!

★ உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஊக்கமும் ஆதரவும் அளியுங்கள்!




தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்

## யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, — கொழும்பு.
போன்: 7651.

இலட்சுமித் தோட்டம்

# 'எனது கணவனை ஏமாளியென தோட்டத்துரை கூறினர்'

## குறுக்கு விசாரணையின்போது சாட்சி அளித்த பதில்

இலட்சுமித் தோட்டக் கமிஷன் விசாரணை இன்று ஆரம்பமானதும், தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. பார் குமார குலசிங்கம், திரு. ஏ. எம். பொடிமாத்தையா என்பவரை விசாரணை செய்தார். பொடிமாத்தையா இந்த வழக்கு சம்பந்தமாக முன்னொரு முறை கமிஷன் முன்னால் சாட்சியமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் முறையாகத் தான் சாட்சியமளிக்கும்போது உண்மையைச் சொல்லாமல் மறைத்ததற்காக தோட்டத்துரை திரு. ஹார்லி தன்னை ஒரு ஏமாளி என்று அழைத்தாக பொடிமாத்தையா சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பார்: தோடத்துரை திரு. ஹார்லி இங்குள்ள விஷயம் பற்றிச் சொல்லச் சொன்னர்.

சாட்சி: 'நீ என்னிடம் வந்து சொன்னதை கமிஷன் முன்னிலையிலும் ஒன்றும் விடாமல் சொல்லு' என்று திரு. ஹார்லி என்னிடம் சொன்னர்.

பார்: முதல்முறை நீர் சாட்சியமளிக்கும்போது நீர் பொலிஸிடம் கொடுத்த வாக்குமூலம் ஒன்றை உம்மிடம் பிரஸ்தாபித்தேன்.

சாட்சி: ஆம்.

பார்: திரு. ஹார்லியுடன் நீர் ஆலோசித்தது உண்டா?

சாட்சி: இல்லை.

பார்: நீர் பொலிஸுக்குக் கொடுத்த வாக்குமூலம் பொய் இல்லையா?

சாட்சி: அது பொய்யான வாக்குமூலம்.

பார்: நீர் ஏன் பொய் வாக்குமூலத்தைக் கொடுத்தீர்?

சாட்சி: நான் பயத்தால் அபபடிச் செய்தேன். சின்னக் கறுப்பன் பொய் வாக்குமூலம் கொடுக்கும்படி என்னிடம் சொன்னர். நான் வேலையை இழந்தும் இருந்தேன். திரு. ஹார்லியின் நம்புக்கைக்கு விரோதமாக நான் நடந்திருந்தால், எனது குழந்தைகளும், மனைவியும் பசியால் வாட நேரிடலாம்.

பார்: சாட்சியமளிக்கும் போது திரு. ஹார்லிக்குச் சாதகமாக சாட்சி சொல்ல எண்ணியிருந்தீர்?

சாட்சி: ஆம்.

பார்: முதல்முறை சாட்சியமளித்தபிறகு திரு. ஹார்லி உம்மை ஏமாளி என்று கூறியதற்காக, ஹார்லியிடம்சொன்ன வாக்குமூலத்தை மறந்து மனம் மாறி இங்கு சாட்சியமளிப்பது திரு. ஹார்லியைக் கைவிடுவதாக உமக்குப் படவில்லையா?

சாட்சி: பதில் இல்லை.

பார்: பொலிஸுக்கு எத்தனை முறை வாக்குமூலம் கொடுத்தீர்?

சாட்சி; எனக்கு ஞாபகமில்லை.

பார்: நீர் முதலில் காங்கிரஸுக்கு ஆதரவாக இருந்திருக்கிறீர். பிறகு ஏன் மாற வேண்டும்?

சாட்சி: அவர்கள் எனக்கு ஒழுங்காகப் படிதரவில்லை. வாழ்வதே பெரிய கஷ்டமாகி விட்டது.

பார்: வில்லியத்தின் மரணம் பற்றி நீர் பொலிஸில் சாட்சியம் கொடுத்தீர். அப்போது காங்கிரஸில் அங்கத்தவராக இருந்தீரா?

சாட்சி. அதற்குப் பிறகு 2 மாதம் நான் காங்கிரஸில் இருந்தேன்.

பார்: உமது வாக்குமூலம் காங்கிரஸிற்கு எதிரானது?

சாட்சி: உண்மை எதுவோ அதை நான் சொன்னேன்.

பார்: துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக நீர் கொடுத்த வாக்குமூலத்தை விட காங்கிரசுக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்ததுண்டா?

சாட்சி: என்னல் ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியவில்லை.

பார்: உமது மகளுக்கு எவராவது அடித்ததாக நீர் புகார் செய்தீரா?

சாட்சி: ஆம்.

பார்: இது உண்மையா அல்லது பொய் வாக்குமூலமா?

சாட்சி:உண்மையான வாக்குமூலம்.

பார்: உம்முடைய மகள் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழியில் பலர் அவளை அடித்தார்களா?

சாட்சி: ஆம்.

பார்: உமது மகளை மற்றவர்கள் அடித்ததற்கு என்ன காரணம் கற்பித்தீர்?

சாட்சி: பெரியவர்களுக்கிடையில் ஏதாவது தீர்த்துக் கொள்ள வேண்டியதாக இருப்பதால், அதில் குழந்தைகளை இழுக்கக்கூடாது.

பார்: பலர் தோட்டத்துரை பக்கமாக இருந்தார்கள். நீர் காங்கிரஸ் பக்கம் இருந்தீர். அதனுல்தான் உமது மகளை மற்றவர்கள் அடித்திருக்க வேண்டும். இதுபற்றி நீர் பொலிஸுக்குப் புகார் செய்தீரா?

சாட்சி: ஆம்.

பார்: பின்ஹாமிக்கு எதிராக நீர் பொலிஸில் புகார் செய்தது ஞாபகமிருக்கிறதா?

சாட்சி: ஆம்.

பார்: உமது மனைவியிடம் உம்மைக் கொல்லப் போவதாக பின்ஹாமி பயமுத்தினரா?

சாட்சி: எனக்கு ஞாபகமில்லை.

பார்: பிஸ்ஹாமி கையில் ஒரு பொல்லு வைத்திருந்தாக உம்முடைய கனைவி சொன்னரா?

சாட்சி: ஆம்.

பார்: உம்முடைய மனைவியின் பேச்சை நம்பிப் பொலிஸில் புகார் செய்தீராக்கும்?

சாட்சி: ஆம்.

பார்: பின்ஹாமி மெண்டிஸ் என்பவரைப் பயமுறுத்தியதாக பொலிஸில் மற்றொரு குற்றச்சாட்டும் இருந்தது.

சாட்சி: எனக்கு அவரைத் தெரியும். ஆனல் குற்றச் சாட்டைப் பற்றி ஒன்றும் தெரியாது?

கமிஷனர்: உண்மையைச் சொல்லும்.

பார்: நீர் ஒரு தொழிலாளி?

சாட்சி: ஆம்.

பார்: தொழிலாளர் கஷ்டங்களுக்கு முடிவு காண தொழிலாளர் ஒன்று சேர வேண்டும்?

சாட்சி: ஆம்.

நிர்வாகத்துக்காக ஆஜரான திரு. ஜெயவிக்கிரமாவினல் பொடிமாத்தையா விசாரணை செய்யப்பட்டார்.

ஜெய: இன்று சிங்களவரும் தமிழரும் தோட்டத்தில் வேலை செய்கிறர்கள்.

சாட்சி: ஆம்.

ஜெய: எல்லாத் தொழிலாளரும் ஒரே மாதிரி நடத்தப் படுகிறர்கள் இல்லையா?

சாட்சி: ஆம்.

தொடர்ந்து திரு. ஜெயவிக்கிரம பொடிமாத்தையாவின் மனைவி பொடினேனவை விசாரணை செய்தார்.

ஜெய: இப்போதும் நீர் இலட்சுமித் தோட்டத்தில் வேலை செய்கிறீரர்?

சாட்சி: ஆம்.

ஜெய: இலட்சுமித் தோட்டத்துக்கு வருவதற்கு முன்னர் நீர் வேறு எந்தத் தோட்டத்தில் வேலை செய்தீர்?

சாட்சி: வேறொரு தோட்டத்தில் வேலை செய்தேன்.

கமிஷனர்: அந்தத் தோட்டத்திலும்அப்போதுஒரு வேலை நிறுத்தம் நடந்தது?.

சாட்சி: ஆம்.

கமிஷனர்: காலம் கடத்துவது அந்தத் தோட்டத்தில் கஷ்டம்?

சாட்சி: ஆம்.

கமிஷனர்: இலட்சுமித்தோட்டத்துக்கு வந்ததும் நீர் காங்கிரஸில் சேர்ந்தீர்-ஏன்?

சாட்சி: இலட்சுமித் தோட்டத்து லயனில் நாங்கள்தான் ஒரு சிங்களக் குடும்பம். மற்றவர்கள் எல்லோரும் காங்கிரசைச் சேர்ந்த தமிழர்கள். நாங்களும் காங்கிரஸில் சேர்ந்து கொண்டோம்.

ஜெய: நீரும் கொழுந்து பறிப்பவர்களில்ஒருவராக்கும்?

சாட்சி: ஆம்.

ஜெய: உமக்கு கருணவதி என்ற பெண்ணைத் தெரியுமா?

சாட்சி: ஆம்.

ஜெய: பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தன்று என்ன நடந்தது என்று தயவு செய்து சொல்லமுடியுமா?

சாட்சி: ஆம்.

ஜெய: அன்று கருணவதிக்கு என்ன நடந்தது?

சாட்சி: சிலம்பாயி என்ற பெண் கருணவதியை கூடையால் தாக்கினர். அவள் அப்போது பங்களாவுக்குப் பக்கத்தில் இருந்தார். கருணவதியும் சிலம்பாயிக்குப் பக்கத்தில்த் தான் இருந்தார்.

ஜெய: எல்லோரும் கருணவதியைக் கல்லால் அடித்தார்கள்?

சாட்சி: எல்லோரும் கல்லால் அடிக்கவில்லை.

ஜெய: அங்கு மாரியப்பனும், சுப்பிரமணியமும் இருந்தார்கள். நீர் காணவில்லையா?

சாட்சி: ஆம். பங்களாவுடன் இணைக்கப்பட்டிருந்த தந்திக் கம்பிகளை அறுத்த பிற்பாடு, பங்களாவுக்கும், ஆபீஸுக்கும் கல்லால் அடித்தார்கள். கூட்டத்திலிருந்தஒருபெண்பொலிஸ் வருகிறது என்று கத்தினர். பொலிஸ் ஜீப் வரும்போது நான் ரோட்டில் நின்றிருந்தேன். பெண்கள் ஜீப்பை நிறுத்தினர்கள், ஜீப் நின்றதும் பெண்கள் கல்லால் அடித்தார்கள். பொலிஸ்காரர் ஜீப்பிலிருந்து இறங்கியதும், ஆராயி பொலிஸின் தடியைப் பறித்துக்கொண்டார். காந்தாரி பொலிஸின் தொப்பியை எடுத்துக்கொண்டார். மேற் பக்கத்திலிருந்தும் கல்லால் அடித்தார்கள். நான் லயனுக்கு ஓடினேன். அறைக்குள் நுளைந்ததும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. நான் இன்றும் காங்கிரஸில் ஒரு சாதாரண அங்கத்தவன்.

கமிஷனர்: காங்கிரஸிற்கு கடைசியாக எப்போது சந்தா கொடுத்தீர்?

சாட்சி: ஆறு மாதங்களுக்கு முன்பு பணம் கட்டினேன்.

கமிஷனர்: வில்லியம் சுடப்பட்ட சம்பவம் உமக்கு ஞாபகத்தில் இருக்கின்றதா?

சாட்சி: ஆம்.

திரு. பார் குமாரகுலசிங்கத்தினல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, திரு. ஹார்லி தனதுகணவனை ஏமாளி என்று பேசியது தனக்குத் தெரியுமென்றும், தான் இன்றும் தொழிலாளர் காங்கிரஸில் அங்கத்துவம் வகிப்பதாகவும், தனக்கு அதில் நம்பிக்கையிருப்பதாகும் தெரிவித்தார்.

பார்: காங்கிரஸிற்கும் உமக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்லிக்கொள்வதில பல முட்டுக்கட்டைகள்ஏற்படலாம். பசியால்வாட வேண்டிவரும்?

சாட்சி: ஆம்.

பார்:நீர் பொலிஸுக்கு வாக்குமூலமளிக்கையில் டிரைவர் ஜோனும் மற்று நால்வரும் உம்முடன் கோபமாக இருந்தார்கள் என்று கூறினீரா?

சாட்சி: எனக்குச் சரியாக ஞாபகமில்லை.

பார்: பின் ஹாமியின்மீது வீண் குற்றம் சாட்டினீரா?

சாட்சி: ஆம்.

பார்: உமது கணவரும் ஒரு வாக்குமூலமளித்தாரா?

சாட்சி: ஆம்.

பார்: வீண்குற்றம் சாட்டுவதற்கு யார் உமக்குச் சொல்லித் நந்தார்?

சாட்சி: முத்தையாவும் சேவாலும் பெரிய கறுப்பனும்.

பார்: பின் ஹாமிக்கு எதிராக நீர் பாரதூரமான ஒரு குற்றச் சாட்டு சுமத்தியிருக்கிறீர்.

சாட்சி: ஆம்.

பார்; உமது மகளை மேரி தாக்கியது உமக்கு ஞாபகமாக இருக்கிறதா?

சாட்சி: ஆம்.

பார்: இதுவும் காங்கிரஸ் நடவடிக்கைகளின் விளைவு அல்லவா?

சாட்சி: எனக்குத் தெரியாது.

அடுத்தபடியாகச் சாட்சியமளிக்கும்படி எச் காலின்ன கேட்கப்பட்டார். பார் அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

கமிஷனர்: உண்மையைச் சொல்லும் உமக்கு ஒன்றும் நடந்துவிடாது.

சாட்சி: ஆம்.

பார்: நீர் திரு. ஹார்லியின் உறவினர் அல்லவா?

சாட்சி: இல்லை.

கமிஷனர்: வெட்கப்படாதீர்.

பார்: ஜேனை உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

பார்: டேவித் சிங்கோவை உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

பார்: இராமையாவின் மகளை உமக்குத் தெரியுமா?

சாட்சி: ஆம்.

பார்: அவர் குணசேகராவையா மணம் செய்துள்ளார்!

சாட்சி: ஆம்.

பார்: குணசேகரா ஜேனுக்கு உறவினரா?

சாட்சி: எனக்குத் தெரியாது.

பார்: தோட்டத்தில் ஆராயியுடன் நடந்த சம்பவம் உமக்கு ஞாபகமிருக்கிறதா?

சாட்சி: ஆராயியை அன்று நான் காணவில்லை.

கமிஷனர்: (பெண்ணைப் பார்த்து) இந்தப் பெண்ணை விசாரணை செய்து பயனில்லை. உமக்குத் தெரிந்த சம்பவங்களையெல்லாம் மறுத்து உரைக்கத்தான் இங்கு வந்திருக்கிறீர். உமது கணவரையாவது உமக்குத் தெரியுமா?

சாட்சி: ஆம்.

கமி—னர்: இது தான் உமக்குத் தெரிந்ததெல்லாம்.

சாட்சி: பதில் இல்லை)

அடுத்ததாக கருணவதி விசாரணக்கு அழைக்கப்பட்டு, திரு. சாம்விஜய சிங்காவினல் விசாரணை செய்யப்பட்டார்.

கருணவதி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த தினத்தன்று, நான் தோட்டத்துக்கு கொழுந்து பறிக்கப் போய்க் கொண்டிருந்தேன். சிலம்பாயி எனக்குக் கூடையால் அடித்து, தனிப்பட்ட விவகாரங்களைப் பற்றிக் கீழ்த்தரமாகப் பேசனர். அடிக்கிறர்கள் என்று கூவிக்கொண்டு பங்களாவுக்குப் போய், திரு ஹார்லியின் சமயற்காரனிடம் சம்பவத்தைச் சொன்னேன். அவர் திரு. ஹார்லியிடம் சொல்லுவதாகச் சொன்னர். இதே நேரத்தில் சிலம்பாயி மற்றவர்களுடன் சேர்ந்து பங்களாமேல் கல்லால் அடித்தார். பங்களா தாககப் பட்டதும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. கூட்டம் அப்போது ரோட்டை நோக்கித் திரும்பி லயன் பக்கமாக ஓடியது. நான் ஆபிஸில் இருந்ததால், தொழிற்சாலையில் இருந்து வெளிவந்தவர்களைக்காண முடியவில்லை.

சாம்: தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளரின் பெயர் உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

சாம்: அப்படியென்றல் ஒருவரும் வெளியில் வரவில்லை என்பது உமக்கு எப்படித்தெரியும்?

சாட்சி: (பதில் இல்லை.)

சாம்: சிலர் தொழிற்சாலையிலிருந்து வெளியில் வந்தார்கள்?

சாட்சி: ஆம்.

சாம்: அவர்களை யாரும் கம்பால் அடிக்கவில்லை?

சாட்சி: இல்லை.

இந்த நிலையில் கருணவதி திரு. பார் குமாரகுலசிங்கத்தினல் குறுக்கு வசாரணை செய்யப் பட்டார்.

கருணவதி குறுக்குவிசாரணையின் போது தெரிவித்ததாவது:

எனக்குக் கருணதிலக்காவைத் தெரியாது. எனக்கு

(5ம் பக்கம் பார்க்க)


நந்திகேஸ்வர நாட்டியாலயம்

தயாரித்து அளிக்கும்

"பரதாஞ்சலி"

பரத நாட்டியமும் மற்றும் நடனங்களும்

தொடர்ந்து

"ஈழத்தாய்"

நாவலர்தாசன் எழுதிய

நவீன நாட்டிய நாடகம்

நாட்கள்: சனிக்கிழமை — திங்கட்கிழமை

திகதிகள்: 2-9-61; 4-9-61

நேரம்: பி. ப. 6-30 மணிக்கு

இடம்: யாழ்.நகர மண்டபம்

பிரவேசக் கட்டணம்: ரூ.10. ரூ.5. ரூ.3.

மணிவாக்கு

"உபகாரத்தைவிட அனுதாபமே அதிக உதவி செய்வதாகும்"

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ '0உ (26-8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## பொது எழுத்து

இந்தியாவிலே தேசிய ஒற்றுமையை பலப்படுத்த, பிரதமர் நேருஜியின் தலைமையில் மாநில அமைச்சர்கள் கூடி, நாட்டிலுள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவாக ஒரே எழுத்து இருக்கவேண்டும் என்றும், அது 'தேவநாகரி' எனும் சம்ஸ்கிருத எழுத்தாகததான் இருக்கவேண்டுமென்றும் செய்துள்ள தீர்மானம், புதிதாக ஒரு தகராறைக் கிளப்பி, இருக்கும் ஒற்றுமையையும் குலைத்துவிடுமோ என்று அஞ்சக்கூடியதாக இருக்கிறது.

அம்மகாநாட்டிலே தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் காமராஜரும் கலந்துகொண்டார். அவர் இந்த யோசனையை ஒப்புக்கொண்டிருப்பின் அது ஆச்சரியமே. ஏற்கெனவே தமிழ் நாட்டில் இந்திமொழிக்கு எதிர்ப்பு இருக்கிறது. இத்துடன் தேவநாகரி எழுத்தையும், தேசியபொது எழுத்தாகச் செய்வதாயின், மொழிப் பிரச்னையுடன் எழுத்துப் பிரச்னையும் சேர்ந்து தலைவலி திருகுவலியாகிவிடும்.

தேவநாகரி எழுத்து, இந்தியாவில் பெரும்பாலோர் எழுதுவதாக இருக்கலாம். ஆனல் தென்னட்டிலே கோடிக்கணக்கானவர்களுக்கு அந்த எழுத்துக்கள் புதிதாகும். தேவநாகரியைக் கற்றுகொள்வதென்பது சுலபமன்று. அதிகமான கூட்டு எழுத்துக்கள் அதில் உண்டு. பல உச்சரிப்புகளை தேவநாகரியில் எழுத முடியாது. மேலும் 'டைப்' மெஷின் அமைப்பதிலும் அதிக சிக்கல்களுண்டு. இத்துடன் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு இந்த பொது எழுத்துக்களை ஏற்படுத்துவது புதிய சங்கடத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

மகாத்மா காந்தியே தேவநாகரியை மட்டும் பொது எழுத்தாகச் செய்யவேண்டுமென்பதை ஆதரிக்கவில்லை. தேவநாகரி எழுத்தையும் உருது எழுத்தையும் ஒவ்வொருவரும் கற்கவேண்டுமென்று தமது ஹரிஜன் பத்திரிகையில் பல மாதகாலம் இருவித எழுத்துக்களையும் பாவித்து வந்தார். காரணம், தேவநாகரியை மட்டும் பாவிப்பதாயின், முஸ்லிம்களின் அபிமானத்தையும் ஆதரவையும் இழக்கநேரிடுமென்று அவர் கருதி, இந்து — முஸ்லிம் ஒற்றுமையைப் பலப்படுத்த, தேவநாகரியையும், உருதுவையும் சேர்ந்து படிக்க வேண்டுமென்று அவர் பிரசாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் அவரது இந்த முயற்சியும் கைகூடவில்லை. ஏன்? தேவநாகரியைப் பாவிக்கும் இந்தி பேசுபவர்கள், உருது எழுத்துக்களைக் கற்க விரும்பவில்லை. இந்தி பேசுபவர் இதை ஒப்பியிருந்தாலும் தென்னட்டிலுள்ளவர்களுக்கும், வடநாட்டிலும் கூட பலருக்கும் இந்த இருவித லிபிகளும் புதிதாகும். அவர்கள் தங்கள் மொழி எழுத்துக்களை விட்டு அவ்விரு லிபிகளையும் ஒப்பவே மாட்டார்கள். காரணம் புதிதாக இருவித எழுத்துக்களைக் கற்கவேண்டியிருக்கும். சங்கடம்தான்.

ஆனல் இந்திய மொழிகளுக்கெல்லாம் ஒரேபொது எழுத்து இருப்பின் பலரும் பல மொழிகளையும் கற்பது சுலபமாகுமென்பதும் மொழி வேற்றுமைகள் குறையுமென்பதும் உண்மையே. ஆனல் அந்தப் பொது எழுத்து, சுலபமாகவும் ஏற்கெனவே பலரும் அறிந்ததாகவும் இருந்தால் பல விதங்களிலும் நன்மையாகும். நேதாஜி சுபாஷ் பாபு ரோமன் (ஆங்கில) லிபியைப் பொது எழுத்தாக பாவிக்கலாமென்று கருதி, மலாயாவில் நடத்திய போராட்டத்தின் போதும் ஆங்கில பொது எழுத்துக்களிலேயே பல மொழி உத்தரவுகளையும் வெளியிட்டார். ஆங்கில எழுத்துக்கள் ஒன்றரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் கற்பிக்கப்பட்டு வருவதாலும், அது பலருக்கும் பழக்கப்பட்டிருப்பதாலும் 26 எழுத்துக்களே அதில் இருப்பதாலும், அதைப் பொது எழுத்தாகப் பாவித்த அனுபவத்தில் சுலபமாக இருந்தது. ஆனல் ஆங்கில எழுத்தென்பது அந்நியருடையதென்றும், தேசிய உணர்ச்சிகள் அதற்கு இடம் தரமாட்டாதென்றும் வாதிக்கப்படலாம். ஆனல் உலகமெல்லாம் ஒரே குடும்பமென்று க்ருதித் காரியம் செய்யவேண்டிய இக்காலத்தில் எந்த எழுத்தையும் அந்நியமென்று ஒதுக்கமுடியாது. ஆங்கில எழுத்தில் பல மொழிகளிலும் உத்தரவுகளை வெளியிடுவதால் அந்த எழுத்துத் தெரிந்தவர்கள், வெகு சீக்கிரத்தில் பல மொழிகளையும் தெரிந்துகொள்ளவும் இது பயன்படுவதாகவும் இருக்கும். மேலும் நாட்டில் ஒரு சாராருக்கு வசதியளித்து, மற்றவர்களுக்கு வீண் இம்சை ஏற்படுத்தக்கூடிய பாரபட்சமும் இதில் இராது.

ஐரோப்பாவிலே பலரும் பல ஐரோப்பிய மொழிகளைக் கற்க முடிவதற்கு முக்கிய காரணம், அங்கு ரோமன் எழுத்துக்கள் பொதுலிபியாக இருப்பதால் தான். அந்த ரோமன் எழுத்துக்கள் இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா முதலிய நாடுகளுக்குப் புதிதன்று. அந்த லிபிமூலம் இப்பகுதி மொழிகளை சில காரியங்களுக்குப் பாவிப்பதாயின், நம்மில் பலருக்கும் நமது அண்டை மொழிகளை, புதிய எழுத்துக்களைக் கற்காமலே தெரிந்துகொள்ளவும் மொழி வேற்றுமைகளைக் குறைக்கவும் முடியும். இதற்காக ஒரு மொழிக்குரிய சொந்த எழுத்துக்களை விட்டுவிடவேண்டுமென்பதல்ல. ஒவ்வொரு மொழியின் வளர்ச்சியும் அழகும் அந்தந்த எழுத்துக்களில் தான் பெரிதும் தங்கியுள்ளது. ஆனல் மொழி வேற்றுமைகளைக் குறைக்கவும், வேறு பல மொழிகளைக் கற்கவும் தேவநாகரியை விட ஆங்கில (ரோமன்) லிபி பொதுலிபியாகப் பெரிதும் பயன்படுவதாக இருக்கும். இங்கும் சிங்களவர் தமிழும், தமிழர் சிங்களமும் கற்க ஆங்கில லிபியை நனகு பயன்படுத்தலாம்.

# இந்தியாவின் கடந்த கால, எதிர் காலப் பொருளாதாரம்

## சோதனை மிக்க 3-வது திட்டம்

**இந்தியாவின் 3-வது ஐந்தாண்டுத் திட்டம் உலகின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருக்கிறது. இது தமக்கே வியப்பை அளித்திருப்பதாய் நேருஜி சமீபத்தில் கூறினர். 3 நாள் விவாதத்திற்குப் பின் இப்போது லோக சபையும் அதற்கு அங்கிகாரம் அளித்துள்ளது.**

பிலிப் ரிஜெர்

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சென்ற மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. மூன்ருவது திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து அரசினர் தரப்பிலும் பொது மக்கள் தரப்பிலும் பிரதானமாய் விவாதிக்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் சுதந்திர இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்து விவரமான அறிக்கையைத் திட்டக் கமிஷன் வெளியிட்டுள்ளது. இந்தியா அதன் மூன்ருவது திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டிருக்கும் இத் தருணத்தில் அவ்வறிக்கையின் பலாபலன்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. முதலாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தின் போது தேசிய வருவாயில் 18 சத விகிதம் உயர்ந்தது. இதற்கான பிரதான காரணம் விவசாய உற்பத்தித் துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும்.

### இரண்டாவது திட்டம்

ஆனல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய வருவாய் 25 சத விகிதம்எதிர்பார்க்கப்பட்டதற்கு மாருக 20 சத விகிதமே அதிகரித்தது. விலைக் கட்டுப்பாடு நிர்ணயித்தால் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி 1951-ம் ஆண்டிலிருந்து 42 சத விகிதமாக இருந்தது. எனினும் மக்கள் பெருக்கத்தின் அதிகரிப்பால் தனிப்பட்டவர் வருவாய் 20 சத விகிதமே அதிகரித்தது. திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட பொருளாதாரத்தால் கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயத் துறை உற்பத்தி இந்தியாவில் 40 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. தொழியல் உற்பத்தியின் அதிகரிப்பு 120 சதவிகிதமாகும். 80 லட்சத்திற்கும் அதிகப்பட்ட நிலங்களுக்கு நீர்ப்பாசனவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மின்சார உற்பத்தி 23 லட்சம் கிலோவாட்டிலிருந்து 58 லட்சம் கிலோவாட்டாக அதிகரித்திருக்கிறது. எனினும் இரண்டாவது திட்டத்தில் வகுக்கப்பட்ட ஒரு சில லட்சியங்கள் நிறைவேருமற் போய் விட்டன. குறிப்பாக 8 கோடி டன் தானியம் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப் பட்டது. ஆனல் ஏழரைக் கோடி டன் தான் விளைச்சலானது. எஃகு உற்பத்தி 45 லட்சம் டன்னுக இருந்தாலும் எஃகு உற்பத்திப் பொருட்கள் திட்டமிடப்பட்டதைக்காட்டிலும் குறைவாகிவிட்டது. எனினும் கலாசார, சமுதாயத் துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் சாதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி பயிலும் மாணவர்களின் தொகை 70 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. பல்கலைக் கழக மாணக்கர்களின் எண்ணிக்கையும் 140 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. 4000 புதிய மருத்துவ மனைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 25,000 பேர் டாக்டர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றனர். இப்போது 5000 பேர்களுக்கு ஒரு டாக்டர்வீதம் இருக்கின்றனர். எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் போதிய வேலைகளை ஏற்படுத்திக் கொடுப்பது இயலாதிருக்கிறது.

### மூன்ருவது திட்டம்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு மொத்தம் 10629 கோடி ரூபாய் தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மூலதனம் மூலமாகக் கீழ்க் கண்ட பிரதான திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. 3 லட்சம் கிலோவாட் சப்ளை செய்யக்கூடிய ஓர் அணுசக்தி மின் உலையை நிர்மாணித்தல்; வருடத்திற்கு 10 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யும் அரசினருக்குச் சொந்தமான எஃகு ஆலை ஒன்றை நிர்மாணித்தல். ரசாயன தொழிற்சாலைகளை விஸ்தரித்தல். கியாஸ் சப்ளை, உரேனியச் சுரங்கத் தொழில் ஆகியவற்றை விஸ்தரித்தல்; போர்டு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமுதாய அபிவிருத்தி ஆய்வை அதிகரித்தல்; இத்திட்டம் கூட்டுறவு முறையில் தனக்குத் தானே உதவிக்கொள்வதாகும். சமுதாய அபிவிருத்தியை முன்னிட்டுக் கிராமங்கள் முழுவதும் இத் திட்டம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

### பிரதான அம்சம்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மற்ருெரு பிரதான அம்சம் நாட்டின் அரிசி, கோதுமை தேவைகளைப் பூர்த்தி செய்வதும், உற்பத்தி செய்வதுமாகும். ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் இப்

(5-ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

## ஏன் இந்த மனநிலை?

பதுமன்

இலங்கையில் அந்நியர் ஆட்சி நிலவிய காலத்தில் அரசாங்க உத்தியோகம் தான் கதிமோட்சம் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கே பெரிய சீதன பாதனங்களுடன் பெற்றோர்கள் தங்கள் பெண்களைக் கட்டிக்கொடுத்துப் பெருமையடைந்தனர். அந்தக் காலத்துக்கல்வி முறையும் 'அரசாங்க உத்தியோகம் புருஷ லட்சணம்' என்ற முறையிலேயே அமைந்திருந்தது. பெரிய உத்தியோகத்தில் அமர்ந்தவர்களில் அநேகர் வெள்ளைக்காரர்களையும் விஞ்சிவிடும் முறையில் வாழ்க்கையை நடாத்தி வந்தனர். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இப்போது அடிமை வாழ்வு அகன்ற விடத்தும், அரசாங்கத்தில் சொகுசான உத்தியோகம் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்ற மனநிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

வர்த்தகத்துறையிலும், தொழில் நுட்பத்துறைகளிலும் பலரின் சேவை வேண்டியிருப்பினும் அத்தகைய உத்தியோகங்களில் வாலிபருக்கு மனம் அவ்வளவாகப் படிவதாயில்லை. அது மாத்திரமன்றி தொழிலின் மகத்துவத்தைப் பற்றி அவர்கள் சிறிதளவேனும் உணர்ந்துகொள்வதுமில்லை. 'இரும்பைக் காய்ச்சி உருகிடுவீரே, யந்திரங்கள் வகுத்திடுவீரே......' என்று எழுதுவதும் பேசுவதுமாக

(5ம் பக்கம்பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இதுவரை எந்த வருடமும் இல்லாதபடி நபிகள் நாயகம் பிறந்த தின விழா கொழும்பிலும் மற்ற ஊர்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் வர்ணக் காகிதங்களாலும், மின் விழக்குகளாலும் தெருக்கள் அலங்கரிக்கப்பட்டு பெரிய திருவிழாக்கோலமாகக் காட்சியளித்தது.

முகம்மது நபிகள் நாயகமும், அவரது அரிய உபதேசங்களும், இஸ்லாமியருக்குமட்டுமல்ல, மக்கள் குலமனைத்துக்குமே பொதுவுடைமையாகும். அதுபோலவே, வேறு பல சமய மகான்களும், அவர்களது உபதேசங்களும். இவ்வுபதேசங்களில் ஒற்றுமையே அதிகமிருப்பதைக் காணலாம். எல்ல சமயப் பெரியார்களின் வாழ்க்கையும் அவர்களது உபதேசங்களும், எல்லாரும் அறியும்படி பாடசாலைகள் மூலமாகச் செய்யமுடியுமாயின்சமய வேற்றுமைகள் குறையவும் ஒற்றுமை வளரவும் முடியும். பல சமயப் பெரியார்களும் கூடி இவ்விதமுயற்சியைச்செய்யமுடியாதா?

ஃ ஃ ஃ

மட்டக்களப்புப்பகுதியில் ஒரு தாய் தன் ஐந்து குழந்தைகளையும் கிணற்றில் தள்ளி தானும் அதில் குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்த பயங்கரச் செய்தியைப் படித்து பலரும் திடுக்கிட்டோம். குழந்தைகள் இறந்துவிட்டன. நவீன நல்லதங்காள் உயிர் தப்பினன். தாயைக் கைது செய்து, கொலை, தற்கொலை முயற்சிக் குற்றங்கள் சாட்டியுள்ளனர்.

பாவம்! இந்தத் தாயின் சங்கடம் என்னவோ? அதை விசாரித்து அறிந்து அவ்வித கஷ்டம் எந்தத் தாய்க்கும் ஏற்படாமல் தடுக்க இப்பரிதாப சம்பவம் பயன் பட வேண்டும்

ஃ ஃ ஃ

கென்யா தலைவர் கென்யாட்டா ஏழு வருட காலம் சிறைக்காவலில் இருந்துவிட்டு சமீபத்தில் விடுதலையடைந்தார். அவரைச் சிறைப்படுத்திய கென்யா கவர்னர், இப்போது கென்யாட்டா இருக்கும் வீட்டுக்குத் தானே சென்று அவரிடம் கென்யாவின் எதிர்கால அரசியலைப் பற்றி ஆலோசனை கேட்டுள்ளார். கென்யாட்டாவும், பழைய மனஸ்தாபங்களை மனதில் வைத்துக் கொள்ளாமல் மறந்து, அன்புடன் கவர்னரை வரவேற்று அவரிடம் பேசியுள்ளார். காலம் எப்படி மாறுகிறது! அடக்குமுறைகள் நீண்டகாலத்துக்குப் பயன்படாதென்பதற்கு இது நல்ல அத்தாட்சி.

கென்யாட்டாவை இந்தியாவுக்கு வருமாறு பிரதமர் நேரு அனுப்பிய அழைப்பை உடன் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிருர். அவரை நம் இலங்கைக்கும் வரும்படி இலங்கைப் பிரதமர் அழைப்பு அனுப்பினல் அந்த ஆபிரிக்க சுதந்திர வீரரை நாமெல்லாம் நேரில் பார்க்கவும், இலங்கை - கென்யா நல்லுறவுகள் பலப்படவும் வாய்ப்பிருக்கும்.

ஃ ஃ ஃ

சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பிய வானவெளிக்கப்பல் அந்தப்பாதையிலிருந்து தவறி பூமியைச் சுற்றுவதாயும் பின்னர் அதனிடமிருந்து ரேடியோ செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை என்றும் தெரிகிறது.

இதைக் கேட்டும், ரஷ்ய குருஷேவ் முன்போல் கேலியும் கிண்டலும் செய்யலாம். புறப்பட்டு அங்கேயே விழுந்து அங்கிருந்தவர்களைக் கொல்லாமல், பூமியையாவது சுற்றுவது பற்றித்தாம்மகிழ்ச்சியடைவதாவக் கூறலாம்.

ஆனல் இவ்வகையில் அமெரிக்க பெரிதும் முன்னேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வானவெளிக் கப்பல்

(8ம் பக்கம் பார்க்க)

# மேற்கு பேர்லின் 'விமானப் பாதை துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது'

—ரஷ்யா குற்றச்சாட்டு

## "குறுக்கீடு ஏற்பட்டால் அது ஆக்கிரமிப்பாகக் கருதப்படும்"

—வெள்ளைமாளிகை எச்சரிக்கை

மாஸ்கோ, ஆகஸ்ட், 25.

மேற்கு பேர்லினுக்குச் செல்லும் விமானப்பாதையை மேற்கு நாடுகள் பழிவாங்கும் நோக்கத்துடன் பயன்படுத்திவருவதாய் குற்றம்சாட்டி ரஷ்யா கடிதம் அனுப்பியிருக்கிறது. இக் கடிதம்பற்றி நேற்று ஜனாதிபதி கென்னடி தனது வெளிநாட்டு மந்திரி திரு. டீன்றஸ்குடன் ஆலோசனை நடத்தினர்.

இதேசமயம், மேற்கு பேர்லினில் மேற்கு நாடுகளுக்குள்ள போக்குவரத்து உரிமைகளில் ஏதாவது குறுக்கீடு நடைபெறுமானுல் அது ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகக் கருதப்படும் என வாஷிங்டனில் வெள்ளை மாளிகை ரஷ்யாவை எச்சரித்தது.

பேர்லின் பிரச்னை ஐ. நா. வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் யோசனை கூறினர்.

மேற்கு நாடுகள் மேற்கு பேர்லின் விமானப்பாதையைத்துஷ்பிரயோகம் செய்துவருவலால் ரஷ்யா கூறிய புகாரினை மேற்கு நாடுகள் ஆராய்ந்தன. இதேசமயம் மேற்குநாட்டுத் துருப்புக்கள் எல்லையில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கிழக்கு ஜெர்மனியிலுள்ள வெளிநாட்டவருக்கு அங்கிருந்து வெளியேற கஷ்டம் ஏற்பட்டிருப்பதாய் அங்குள்ள ராஜீயத் தூதுவர்கள் தெரிவித்துள்ளதாயும் ஒரு செய்தி கூறுகிறது. ஆனுல் இதுபற்றித் தாங்கள் கேள்விப்படவே இல்லை என கிழக்கு ஜெர்மனி அறிவித்திருக்கிறது.

மேற்கு ஜெர்மன் அரசாங்கம் சட்டவிரோத நடவடிக்கையிலீடுபட்டிருப்பதாயும், இது பற்றி மேற்கு நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ரஷ்யா கோரியிருக்கிறது.

விமானப்பாதை துஷ்பிரயோகம் செய்யப்படுவதாய் ரஷ்யா தெரிவிக்கும் குற்றச்சாட்டு உண்மையானுல், அது ஆழ்ந்து பரிசீலிக்கத்தக்கது என லண்டனில் பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

## பிஸர்ட்டா பற்றிய ஆசிய-ஆபிரிக்க தீர்மானம்

### பிரிட்டன் ஆதரிக்க மறுத்துவிட்டது

நியூயோர்க், ஆக. 24

பிஸர்ட்டா நிலைமை பற்றிய விவாதத்தை ஐ. நா. விசேஷக் கூட்டம் ஒத்திவைத்துள்ளது. இதுசம்பந்தமான ஆசிய – ஆபிரிக்க நாடுகளின் தீர்மானத்தைத் தாம் ஆதரிக்க முடியாது என பிரிட்டன் அறிவித்துவிட்டது. இதனுல் தீர்மானத்தைப் பிரேரித்த ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதாய் அறிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் போக்கு பற்றியும் வருத்தம் ஏற்பட்டுள்ளதாம்.

## ஹங்கேரி பிரதமர்-நேரு சந்திப்பு

புதுடில்லி, ஆக. 25

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் ஹங்கேரியப் பிரதமர் நேற்று ஸ்ரீ நேருவைக் கண்டு பேசினர். காலையில் இவர் ராஜகட்டம் சென்று மகாத்மாகாந்தியின் சமாதிக்கு மலர்வளையம் வைத்தார். நேற்றிரவு நேருஜீ ஹங்கேரிய பிரதமருக்கு ஒரு விருந்தளித்தார்.



## பேர்லினை காப்போம்

"அமெரிக்க மக்களும், நேசநாட்டு மக்களும் தற்போதைய பேர்லின் நிலையில் அந்நகரில் தங்களுக்குள்ள சட்டபூர்வமான உரிமையைப் பாதுகாக்க உறுதிகொண்டுள்ளார்கள்" என ஜனாதிபதி கென்னடி சமீபத்தில் டெலிவிஷனில் பேசிய போது கூறினர். "அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் பேர்லினில் ஒப்பந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ உரிமை பெற்றிருக்கின்றன. படிப்படியாகவோ, அல்லது பலாத்காரமாகவோ ரஷ்யா எங்களை வெளியேற்ற நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என கென்னடி கூறினர்.

# உ. பி. வெள்ளத்தில் மாண்டவர் 129 பேர்

## இந்தியாவில் வெள்ள நிலைமை விபரம்

புதுடில்லி, ஆக. 25

நர்மதை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாய் பம்பாய்–ஆக்ரா தேசிய சாலையில் வண்டிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இந்தூர்-போபால் சாலையிலும் வண்டிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

ஆக்ராவிலும் டில்லியிலும் யமுனை ஆற்றின் வெள்ளப் பெருக்கு சற்றுக் குறைந்திருக்கிறது.

உத்தரபிரதேச வெள்ளத்தில் இதுவரை மாண்டவர்களின் எண்ணிக்கை 129 ஆகும். 8000 கிராமங்களும் பாதிக்கப்பட்டன.

லக்ரோவில் கோமதி ஆறு பெருக்கெடுத்திருக்கிறது. பஞ்சாபில் மொத்தம் 62000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டது.

பீகாரில் கங்காநதி பெருக்கெடுத்து பலகரைப் பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டது.

அஸ்ஸாம் கௌஹாட்டியில் பிரம்மபுத்திராநதி பெருக்கெடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் கோயமுத்தூருக்கருகே அமராவதி, பவானி நதிகள் பெருக்கெடுத்துள்ளன. நீலகிரியிலும் கடும் மழை பெய்திருக்கிறது.

## ஒருபீப்பா குடிதண்ணீர் ஒரு ரூபா

அக்கரைப்பற்று, வெள்ளி

கல்முனைப் பட்டினசபைப் பகுதியிலுள்ள மக்கள் ஒரு பீப்பா குடிதண்ணீருக்கு ஒரு ரூபா கொடுத்து வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மிகவும் கடுமையான வரட்சி தற்போது நிலவிக்கொணடே வருகிறது. கடைவீதியிலுள்ளவர்கள் தங்கள் பாவனைக்கு சதா வண்டிகள் மூலம் பீப்பாக்கணக்கில் தண்ணீர் விலைக்கு வாங்கிப் பாவிக்க வேண்டியிருக்கிறது.

## தமிழ்நாட்டுக்கு ரூ. 25,000

### நேரு அனுப்பினர்

சென்னை, ஆக. 24

தமிழ்நாட்டு வெள்ள நிவாரணநிதிக்கெனபாரதப் பிரதமர் நேரு தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. காமராஜரிடம் 25,000ரூபாய்அனுப்பியுள்ளார் முன்னர் திரு. நேரு நிவாரண நிதிக்கு 25,000 ரூபா அளித்துள்ளார்.

## சீவல் தொழிலாளியின் பரிதாப மரணம்

மத்துகாமம், வெள்ளி

26 வயதுள்ள ஆ. இருதய நாடார் என்னும் வாலிபர் களுத்துறைப்பகுதியான வாதுவையில் மரம் சீவிக்கொண்டிருக்கும்பொழுது தவறிவிழுந்து ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி மரத்திலிருந்து விழுந்ததால் மரணமானுர் என தீர்ப்புக் கூறினர்.

## நாவற்குடா ஸ்ரீ விஞயகராலய புனருத்தாரணம்

காத்தான்குடி, வெள்ளி

நாவற்குடா என்னுமிடத்திலுள்ள ஸ்ரீ கங்காணிப் பிள்ளையார் கோயில் புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. பழைய ஆலயம் இடிக்கப்பட்டு, புதிய மாதிரி ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. திருப்பணி முடிவுற்றதும் கும்பாபிஷேகமும், உற்சவமும் நடைபெற இருக்கின்றன.

## 'எனது கணவனை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் என்பவரைத்தெரியும். ஆனுல், அவர்டிறைவர் ஜோர்ஜ் அல்ல. சிலம்பாயி காலையில் தான் கூடையால் என்னைத் தாக்கினர். ஆனுல் ஒரு சின்னக் காயம் கூட எனக்கு ஏற்படவில்லை. என்னுடையவாக்கு மூலம் கணக்கப்பிள்ளை வீட்டில் வைத்துத்தான் பதிவு செய்யப்பட்டது.

நேரம் போதாமல் இருந்ததால் அடுத்து விசாரிக்கப்படவிருந்த செல்லையா விசாரணை செய்யப்படவில்லை.

## "எல்லா நாடுகளுடனும் நேச உறவு கொள்வோம்"

### டாக்டர் செட்டி ஜகன் அறிவிப்பு

லண்டன், ஆக. 24

எல்லாநாடுகளுடனும் நேச உறவு கொண்டிருப்பதே தமது அரசாங்கத்தின் உத்தேசமாய் இருக்கும் என பிரிட்டிஷ் கயானவில் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ள டாக்டர் ஜெட்டிஜகன் அறிவித்தார். கியூபாவுடன் உள்ள தமது உறவு பொருளாதார அடிப்படையைக் கொண்டது எனக் கூறிய அவர் தாம் அமெரிக்கா சென்று பொருளாதார உதவி பெறுமுகமாக ஜனதிபதி கென்னடியைச் சந்திக்கவிருப்பதாய்த் தெரிவித்தார்.

## இரத்தினக்கம்பளம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றேமேயன்றி, தொழில்வளத்தைப் பெருக்கி நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் மக்களிடத்தே உண்டாவதாய் இல்லை.

### கல்விமுறை

இன்று நிலவிவரும் கல்வித் திட்டமானது தொழில்முறைக் கல்வியோடு இணைந்து செல்லாத காரணத்தினுலேதான் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே வருகின்றது.

தேசியக் கல்வி கமிஷன் இவற்றை எல்லாம் நன்கு பரிசீலனை செய்து நாட்டுக்கேற்ற ஒரு கல்வித் திட்டத்தை வகுப்பார்கள் என நாடு எதிர்பார்க்கின்றது.

### யாழ்ப்பாணத்திலே........

யாழ்ப்பாணம் இந் நாட்களில் கொழும்பு மாநகரைப் போல் மாறிக்கொண்டு வருவதாக அன்பர் ஒருவர் கூறிச் சினந்தார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "நகரம் முன்னேறுவது நல்லது தானே" என்றேன் நான். அதற்கு அவர் கூறியதைக் கேளுங்கள்: "ஐயா! நீங்கள் கருதும் முன்னேற்றம் வேறு. நான் சொல்லவந்தது வேறு. யாழ்ப்பாண வீதிகளை ஒருதரம் சுற்றிப்பாரும். பெண்மணிகள் அநேகரின் நடையுடை பாவனைகளும், அவர்களின் போக்கும் தமிழ்ப்பண்பாட்டுக்கு முற்றிலும் மாருக இருக்கின்றன. யாழ்ப்பாணம் இப்படிக் கீழ்நோக்கிச் செல்லுமென நான் கனவிலும் எண்ணவில்லையே..."

### பிரிட்டனில்

பிரிட்டனில் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகமான வாசனைத் திரவியங்களை உபயோகிக்கின்றனர் என்ற செய்தி கிடைத்திருக்கின்றது.

வருத்தத்துக்குரிய இந்த நிலையை மாற்றுவதற்கு ஏதாவது செய்தாக வேண்டுமென பிரிட்டனிலுள்ள வாசனைப் பொருள் பாவனையாளர் சங்கம் தலையைப் போட்டு அடித்துக் கொண்டிருக்கின்றதாம் பிரிட்டனில் ஆண்கள் வருடமொன்றுக்குச் சுமார் 250,000 பவுன்களுக்கு லோக வாசனைத் திரவியங்களிற் பணத்தை இறைக்கின்றனர் என அறிக்கை ஒன்றிலே படித்தேன்.

இந்த ஆண்களை 'ஆண்மணிகள்' என்று சொன்னுல் பொருத்தமாக இருக்குமா?

## இந்தியாவின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போதைய அளவான ஏழரைக் கோடி டன்னை பத்தரைக் கோடி டன்னுக அதிகரிப்பதாகும். புதிய திட்டத்தின் படி தேசிய வருமானம் ஆண்டுக்கு 5 சத விகிதம் அதிகரிக்கும் என்று திட்ட நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். மேலும் திட்டத்தின் பிரகாரம் 1 கோடியே 35 லட்சம் பேருக்குப்புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். மூன்ருவது திட்டத்திற்கான மூலதன முதலீட்டுக்கு அரசினர் சார்பிலிருந்து 6790 கோடி ரூபாய் பெறப்படும். இப்போதைய வரிவிதிப்பு மூலம் கிடைக்கும் உபரி வருவாய், அரசினர் தொழில் நிலையங்களில் இருந்து கிடைக்கும் லாபம், சொத்துவரி ஆகியவை மூலம் 1368 கோடி ரூபாய் கிடைக்கும். இதில் சென்ற மே மாதம் அமெரிக்காவின்உதவியாக வழங்கப்பட்ட 1 கோடியே 30 லட்சம் டன் கோதுமையின் விற்பனையும் அடங்கும். புதிய வரிகள் மூலம் 1557 கோடி ரூபாய் பெறப்பட வேண்டும்.

அந்நிய உதவிகளாக 2·07 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக் கடன்களை எழுப்புவதில் மூலம் 801கோடி ரூபாய் கிடைக்கலாம். சிக்கன நடவடிக்கைகள் வாயிலாக 517 கோடி ரூபாய் சேர்க்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய தொகை ரூபாய் நோட்டுகளாக அச்சடித்துக்கொள்ளப்படும்.

இந்தியாவின் மூன்ருவது திட்டம் சோதனை மிகுந்ததாகும். அரசியல் ஜனநாயகத் திற்குட்பட்டு நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் வெற்றி இதர நாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும்.

## அறிவுச் செல்வம்

★வான வெளியில் வலம்வந்து, தகவல் கொடுக்கும் அமெரிக்க செயற்கைக் கிரகம், தனது ஓராண்டு காலத்தை பூர்த்தி செய்துள்ளது. சுமார் நூறடி விட்டமுள்ள அலுமினியக் கோளம், இந்த ஓராண்டுக் காலத்தில் 4,480 தடவை பூமியை வலம் வந்ததுடன், 138,000,000 மைல் தூரம் சென்றுள்ளது.

★அமெரிக்கா, மிகஅண்மையில் தனது மிகப் பெரிய துருவ ஆராய்ச்சித் திட்டத்தை விஞ்ஞான ரீதியில் விரிவான முறையில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் துருவங்களில் தாவர சாஸ்திரம், பூதத்துவ சாஸ்திரம், ஆகருஷண சக்தி, சமுத்திர இயல், பௌதீகம் உட்பட பல துறைகளில் விஞ்ஞான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

★ஒரு நாளைக்கு, நீங்கள் எத்தனை குருடர்களைத் தெருவில் பார்க்கிறீர்கள் என்று கேட்டால், '5 அல்லது 10 பேர்' என்று பதிலளிப்பீர்கள். ஆனால் இந்தியாவில் உள்ள குருடர்கள் தொகை எவ்வளவு தெரியுமா? சுமார் 20 லட்சம் குருடர்கள் அங்கு இருக்கின்றனர்! இந்தியாவில் 40 கோடி மக்களுக்கு ஏற்படும் நோய்களில் கண்ணுக்கு வரும் நோய்கள் தான் இரண்டாவது இடம் பெறுகின்றன என்று டாக்டர் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

★அமெரிக்காவின் புதிய "எக்ஸ்புளோரர் பன்னிரண்டு" என்ற செயற்கைக் கிரகம் வான வெளியிலுள்ள அணுக்கள், மற்றும் இதர பொருள்கள் பற்றியெல்லாம் ஆராய்கிறது. 83 ருத்தல் எடையுள்ள இந்த அஷ்டகோண செயற்கைக் கிரகம் பூமியை வலம் வரும் 46-வது அமெரிக்க செயற்கைக்கிரகமாகும்.

★நாம் சாப்பிடும் உணவில், B-12 'விற்றமின்' இல்லாததினாலும், B-12 விற்றமின் நமது உடலில் நன்கு கலபடாததினாலும், இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் முறைகேடான நடத்தையினாலும்தான், நமக்கு இரத்த சோகை உண்டாகிறது!

★வின்ஸ்டன் சர்ச்சில் பாரிச நோய்க்கு ஆளாகி, மூன்று நான்கு முறை பாதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய பேச்சை இனிக் கேட்கமுடியாது என்றுகூட டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். அவரது பிரதமர் காலத்துக் கடைசி நாட்களில், ஒருமுறை கடுமையாகப் பாதிக்கப்பட்டு இரண்டு மாதம் படுக்கையில் கிடந்தார். இதில் விசேஷம் என்னவெனின் வின்ஸ்டன் சர்ச்சிலுக்குச் சாதாரண நோய் ஏற்பட்டது என்றுகூட பிரிட்டிஷ் பொது மக்களுக்குத் தெரியாது.

# மாணவர் மலர்

## விந்தை உலகம்

—" மகான் "—

நிலத்தில் கார் ஓடுகிறது. வானத்தில் விமானம் பறக்கிறது. நிலத்தில் ஓடவும் வானத்தில் பறக்கவும்கூடிய புதிய படைப்பொன்றை விஞ்ஞானிகளே இப்போது கண்டு பிடித்திருக்கின்றனர். இது பற்றிய செய்தியையும் அண்மையில் "மாணவர் மலரில்" படித்தீர்கள். விஞ்ஞானத்தின் புதுமைகள் சொல்லில் அடங்காதவை. நாளை மனிதன் சந்திரனுக்குள் நுழைந்தாலும் அது, ஆச்சரியப்படுவதற்குரிய விஷயமன்று. ஒவ்வொரு நிமிடமும் விஞ்ஞான புதிய புதிய ஆராச்சிகளைக் கண்டுபிடித்துக் கொண்டே வருகின்றான். இது விஞ்ஞான உலகமல்லவா?

விஞ்ஞானத்தின் உதவியால் வெளியாகும் அற்புதங்களை விட இந்த நூற்றாண்டில் நாம் எத்தனையோ விதமான புதினங்களை அறிகின்றோம். இந்த வரிசையில், விஞ்ஞானத்துடன் கொண்ட ஒரு ருசிகரமான செய்தியை இங்கு படியுங்கள்.

பறவையைக் கண்டான் விஞ்ஞானி. அது பறக்கும் விதத்தையும் ஆராய்ந்தறிந்தான். அதே போல், வானத்தில் பறக்கக்கூடிய விமானத்தையும் அவன் கண்டுபிடித்தான். எதிரொலியைக் கேட்டான். அது எதனால் உண்டாகின்றது என்பதையும் அறிந்தான். இதன் முடிவுதான் விஞ்ஞானி கண்ட வானொலி. ஆனால் விஞ்ஞானியின் கருத்துக்கே அப்பாற்பட்டதொன்று இத்தாலியிலுள்ள சிர்மியோன் என்ற இடத்தில் நடைபெற்றிருக்கிறது.

காகம் பறப்பதைப் பற்றி அறிந்திருப்பீர்கள். ஆடு, மாடு நிலத்தில் மேய்ந்து திரிவதைப்பற்றியும் அறிந்திருப்பீர்கள். ஆனால் நீரிலே நீந்தத் தெரியாத வாத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நீந்தத்தெரியாத இந்த வாத்து சிர்மியோன் என்ற இடத்துக்கு வருபவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. இது பற்றி அங்குள்ளவர்கள், யாத்திரீகர்கள் இலாகா அதிகாரிகளைக் கேட்டதில் அந்த வாத்தின் தாய் இறந்துவிட்டதாகவும் அதற்குப்பின்னர் அந்த வாத்தை ஒருபெட்டைக் கோழி வளர்த்து வந்ததாகவும் அதனால் தான் அந்த வாத்து நீந்தக் கற்றுக்கொள்ளவில்லையென்றும் தெரிவித்தனர்.

ஆச்சரியமான அந்தச் செய்தியைக் கேட்டு அங்கு இருந்தவர்கள் அனைவருமே அதிசயப்பட்டனர். ஆனால், இச்செய்தியை அறிந்த குடியானவன் ஒருவன் அந்த வாத்தின் உண்மையான இரகசியத்தை வெளியிட்டதும் இலாகா அதிகாரிகளே வியந்து விட்டனர். அந்த வாத்தின் சொந்தக்காரர், அந்தக் குடியானவன் தான். நீந்தத் தெரியாத அந்த அதிசய வாத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விற்பதற்கு முன்னர் அக் குடியானவன் அந்த வாத்தை ஒருவிதமான சோப்பு பவுடரினால் குளிப்பாட்டியிருக்கின்றான். அந்த சோப்பு பவுடர் வாத்தின் தோலின்மேல் தண்ணீர் ஒட்டாமல் இருக்கும் மெழுகு போன்ற வஸ்துவை நீக்கிவிட்டதாம். அதனால் தான் அந்த வாத்து, தண்ணீரில் நீந்தத் தெரியாமல்— தன் இனத்துக்கே வெட்கமாக இருக்கிறது என்று கூறிமுடித்தான் அவன். அடேயப்பா! வாழையடி வாழையாக நீந்தத் தெரிந்த வாத்தையே இந்த விஞ்ஞானம் மாற்றிவிட்டதென்றால் இது ஒருவிந்தைஉலகம்தானே!

---

## இன்பந்தரும் இசை

இசை செவிக்கு இன்பந் தரும். பாலர்கள் தொடக்கம் வயோதிபர் வரை இசையை விரும்புகின்றார்கள். கொடிய விஷ நாகமும் மதம் பொருந்திய யானையும் கூட இசையில் மயங்குகின்றன.

கர்நாடக சங்கீதம் மிகவும் ஆதியிலேயே ஆரம்பமாகியது. அது அதிக நுட்பங்களும் பெருமையும் வாய்ந்தது. கர்நாடக சங்கீதம் ஸரிகமபதநி என்னும் ஏழு சுரங்களைக் கொண்டுள்ளது. இவை சப்த சுரங்கள் என்று வழங்கப்படும்.

கர்நாடக சங்கீதத்தில் 72 மேள கர்த்தா ராகங்கள் உள. கர்த்தா ராகம் என்றால் அதில் சப்த சுரங்களும் உளதாகவே இருக்கும். கர்த்தா ராகங்களை சம்பூர்ண ராகங்கள் என்றும் கூறுவர். ஒவ்வொரு கர்த்தா ராகத்திலுமிருந்து பல ஜன்ய ராகங்கள் உண்டாகும். எனவே 72 மேள கர்த்தா ராகங்களிலுமிருந்து பல ராகங்கள் உண்டாகின்றன.

தியாகராஜ ஸ்வாமிகள், சியாமா சாஸ்திரிகள், ஸ்வாதித் திருநாள் மகாராஜா, கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் பல வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த கர்நாடக சங்கீத மேதைகளாவர். இவர்கள் இயற்றிய கீர்த்தனைகளும் உருப்படிகளுமே இன்றும் பாடப்பட்டும் வருகின்றன. இன்றைய கர்நாடக சங்கீத வித்துவான்களும் இசை அபிமானிகளும் இப்பழம் பெரியார்களுக்கு நினைவு விழாக் கொண்டாடி வருகிறார்கள்.

---

## பூச்சிப் பிரச்சினை

— தேவமீனு —

இந்தப் பக்கம் திரும்பினால் பெர்லின் பிரச்சினை. அந்தப் பக்கம் திரும்பினால் பிஸர்ட்டா! இவைகளுக்கு நடுவில் காஷ்மீர் பிரச்சினை, மொழிப்பிரச்சினை, நாட்டுப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை...அப்பப்பா...! எங்கு பார்த்தாலும்உலகம் அல்லோல கல்லோலமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட பல பிரச்சினைகளுக்குள், மதுரை ஜில்லாவில் பூச்சிகள் பிரச்சினை ஆரம்பமாகியிருக்கிறது. கம்பளிப் பூச்சிகளின் உக்கிரமான படையெடுப்பால், மதுரை ஜில்லா உசிலம்பட்டிப்பகுதியில் 12,39,775 ஏக்கர் நிலக்கடலை பயிர் பாதிக்கப்பட்டதுடன் அதனால் 6.19 லட்சம் ரூபாய் நஷ்டம் மேற்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், பாருங்களேன் இப் பூச்சிக் கொடுமையை!

உலகில் யுத்தம் ஏற்பட்டால்' எத்தனையோ விதமான படைகள் உலகின் பல பாகங்களிலும் பங்குகொள்ளும். இதற்கு ஏற்றால்போல்இப் பூச்சி வகைகளை ஒழிப்பதற்கு ஆகாய விமானமூலம் மருந்து தூவப்படுகிறது. மறைந்து இருந்து போராடும் வீரர்களைப் போன்று, இக் கம்பளிப் பூச்சிகளில் கால் பங்கு தலைமறைவாகச் சென்று விடுகின்றனவாம். சிறிது காலத்துக்குப் பின்னர் மீண்டும் வெளியில் வந்து தங்களது 'பயிர் படையெடுப்பை' இப்பூச்சிகள் ஆரம்பிக்கின்றனவாம்!

கம்பளிப் பூச்சிகளின் யுத்தத்தோடு, தஞ்சை ஜில்லாவின் கடற்கரையோரக் கிராமங்களில் "செரவி" என்ற இனத்தைச் சேர்ந்த பறவைகள் ஆயிரக் கணக்கில் படையெடுத்துவந்து, ஆண்டுதோறும் பயிர்களை அழித்துவருகிறன்றன இரவு நேரத்தில் பயிர்களுக்குச் சேதம் உண்டுபண்ணும் இப் பறவைகள், சாப்பிடுவதற்கு ருசியாக இருப்பதால், அவைகளைச் சுடுவதற்கு வேட்டைக்காரர்களுக்கு ஊக்கமளிக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இப்படியிருக்கிறது சங்கதி!

---

## தமிழாசிரியர் கல்விமந்திரிக்கு மகஜர்

காத்தான்குடி, வெள்ளி

கிழக்கிலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. கா. கோவிந்தசாமி தலைமையில் கடைபெற்றது. வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டபின் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைபூராவும் தமிழ்ப் பிள்ளைகளும், முஸ்லிம் பிள்ளைகளும் சேர்ந்து கல்விபயிலும் சகல தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ்ப்பகுதி, முஸ்லிம்பகுதியெனப் பிரிக்கப்படவேண்டும்.

இலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளிலுள்ள காலிஸ்தானங்களுக்கு வேலையற்றிருக்கும் ஆசிரியர்களை நியமித்து அவர்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டும்.

கிழக்கிலங்கை அரசினர் தமிழாசிரியர்களுக்கெனத் தனிப்பட்ட சேவை விபர இடாப்புத் தயாரித்துத்தரவேண்டும்.

தீர்மானங்களைக் கௌரவ கல்விமந்திரிக்கனுபபிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

## கச்சாயில் நாடகம்

கொடிகாமம், வெள்ளி

கச்சாய் அம்மன் கோயில் முன்றல் தூக்குத் தூக்கி நாடகம் சிறப்பாக நடிக்கப் பெற்றது. திங்கட்கிழமை தோறும் நாடகங்கள் நடிக்கப்பெற்றுவருகின்றன.

## ரோட்டரிச் சங்கத் தலைவருக்கு

### விமான நிலையத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

"உலக சமாதானத்தை வளர்ப்பதற்கு ஒவ்வொரு ரோட்டேரியனும் செயலில் இறங்கவேண்டும்" இவ்வாறு சர்வதேச ரோட்டரிச் சங்கங்களின் தலைவர் திரு. யோசேப் ஏ. அபே பலாலி விமானநிலையத்தில் யாழ்ப்பாண ரோட்டரிச் சங்கத்தினரால் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது கூறினார்.

திருச்சியிலிந்து கொழும்பு செல்லும் வழியில் நேற்று மாலை 3 மணியளவில் பலாலி விமான நிலயத்தில் திரு அபே, திருமதி அபே, ரோட்டரியின் கவர்னர் ஸ்ரீநிவாசன் ரோட்டரியன் கே. எஸ். எஸ். கிருஷ்ண ராவ் ஆயோருக்கு இச்சங்கம் ஒரு வரவேற்பளித்தது.

இவ்வைபவத்தில் ரோட்டரியன்களான பருத்தித்துறை மாவட்ட நீதிபதி என். சிவஞான சுந்தரம், என். சத்தியலிங்கம் உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள பலவிடங்களிலுமிருந்துஅநேகர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண ரோட்டரிச் சங்கத் தலைவர் திரு. வி. சத்தியநாதன் திரு. அபேயை வரவேற்றுப் பேசியதாவது:— யாழ்ப்பாணத்தில் இச்சங்கம் 20 வருடங்களாக நடைபெற்று வருவதுடன் சமுகநலனுக்குப் பல தொண்டுகளாற்றியுள்ளது. சர்வதேச ரோட்டரிக் கிளப் தலைவரை வரவேற்கும் பேறு எனக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தனக்கெனவொரு தனிக் கலாசாரத்தையும் பூகோள அமைப்பையும் கொண்டுள்ளது. அவற்றை திரு. அபே பார்க்கமுடியாதமைக்காக வருந்துகின்றேன்

---

## திருமணத்துக்குப் பின் விபத்து

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கில் நடைபெற்ற திருமணம் ஒன்றுக்குப் பின் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த மோட்டார் கார் விக்னேஸ்வரக்கல் லூரிக்கு அருகாமையில் தடம் புரண்டதன் விளைவாக, மாப்பிள்ளைத் தோழன் காயமுற்றார்.

மற்றும் இருவரும் காயமுற்றனர். அவர்கள் உடனடியாகப் பருத்தித்துறை ஆரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

---

## ஜெனிவா மகாநாடு

ஜெனிவா, ஆக. 25

லாவோஸிலிருந்து அந்நியத் துருப்புக்களை விலக்கிக்கொள்வதுபற்றி ஜெனிவா மகாநாட்டில் பொதுப்படையான ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.


அரிய சந்தர்ப்பம்!!

வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட

**"நைலோன்" சேலைகள்**

"ஹோல்ட்" கிரீப்பர் டிசைன் போட்ட
பச்சை, ஊதா, மஞ்சள், வெள்ளை
கலர்களில் திறமான சேலைகள்

சாதாரண விலை ரூ.45/ விற்பனை விலை ரூ.25/

"நைலோன்" சேலைகள் ஸ்கேட்
போடர்கள் போட்டவை

சாதாரண விலை ரூ.47-50 விற்பனை விலை ரூ.27-50

மறவாதீர்கள் 10 சத வீதம் கழிவு உண்டு

**டயரும்ஸ்**

54, 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

No. 14



**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

கார் ஓட்டுவதற்குப் பழகுங்கள். இருபதே நாட்களில் நீங்கள் கார் ஓட்டுவதற்குப் படித்து "லைசன்ஸ்" எடுக்கவேண்டுமானால் இன்றே எம்மிடம் வாருங்கள்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்ற
ஸ்தாபனம்

**ராஜா டிறைவிங் ஸ்கூல்**

132, பேராதனிய ரோட். கண்டி

மேல் பகுதியில் உள்ளவர்களுக்கு

**ஆம்ஸ் ஹோட்டல் பில்டிங்**

மல்லியப்பூ, ஹட்டன்.

## கலாரஞ்சன சபா அங்குரார்ப்பணம்

கலாரஞ்சன சபா அங்குரார்ப்பணக் கூட்டம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் பலாலி ஆசிரிய கலாசாலை இசைப் பேராசிரியர் பொன். முத்துக்குமாரு தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இக் கூட்டத்தில் இசை வகுப்புக்கள், இசைவிழாக்கள் நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. பின்னர் புதுவருட உதியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொன் முத்துக்குமாரு, உப தலைவர் திருமதி சிங்கராசா காரியதரிசிகள்: முத்துக்குட்டி, வர்ணசிங்கம் தனாதிகாரி: வி: நடேஸ்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள். திரு. எஸ். ஆர். மணி ஐயர், கே. பத்மநாதன், ஆர். ஞானசுந்தரம், செல்வி நாகம்ம, செல்வி. மனோரஞ்சிதம், செல்வி நேசபூபதி:

---

## சென்னையில் குறைந்த ஜனனவிகிதம்

சென்னை, ஆக. 23

இந்தியாவிலே சென்னை இராச்சியத்தில்தான் ஜனன விகிதம் மிகக் குறைவாய் இருப்பதாகச் சுகாதார இலாகா மந்திரி தெரிவித்தார்

## தண்ணீரில் குதித்து தம்பியை மீட்டார்

சென்னை, ஆகஸ்ட் 24

சாங்கோம் எஸ்டேட்டில் பொதுநல மண்டபத்துக்கு எதிரிலுள்ள மைதானத்தில் 6 வயதுச் சிறுவனும் அவன் தம்பியும் வயது (4) விளையாடிக்கொண்டிருந்தனர். நான்கு வயதுத்தம்பி அங்குள்ள ஊற்றில் தவறி விழுந்துவிட்டான். அங்குள்ள குழந்தைகள் கூக்குரல் இட்டதைக் கேட்ட அவனது அண்ணை ஓடிப்போய்த் தம்பியை மீண்டான்.

---

## அதிகாரிகள்போல் நடித்த இருவர் கைது

கொழும்பு,ீவியாழன்

வெள்ளவத்தையிலுள்ள உணவு விடுதியுள் நேற்று இருவர் சென்று தாம் குடியேற்ற இலாகா அதிகாரிகள் என்று கூறி, அங்கு வேலை செய்யும் சில சிப்பந்திகள் தமது விசாக்களைப் புதுப்பித்துக்கொள்ளவில்லை யென்றும் தமக்கு 500 ரூபா லஞ்சமாகக் கொடுத்தால் தாம் ஒருவிதமாக அதை சமாளித்து விடுவதாகவும் கூறினர்.

இவர்களுடைய நடவடிக்கைகளைச் சந்தேகித்த உணவு விடுதிச்சாலைச் சிப்பந்திகள் பொலிஸாருக்கு இதுபற்றிப் புகார் ₄சய்தார்கள். பொலிஸார் இருவரையும் கைது செய்து நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

## முத்தமிழ் கலைமன்றத்தினர்

### சந்நிதிக்கு பாதயாத்திரை

மாவிட்டபுரம், வியாழன்

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்ற பஜனைக் கோஷ்டியினர் இன்று பாதயாத்திரையாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகப்பருமானின் ரதோற்சவத்திற் கலந்துகொண்டனர்.

---

## குழைந்தைகள் திருநாள்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில உலகக் குழந்தைகள் தினம் இவ்வாண்டு அக்டோபர் மாதம் 2-ந் திகதி இலங்கையின் பல பாகங்களிலும் கொண்டாடப்பெறும். குழந்தைகள் பராமரிப்பு இலாகா இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

# 2 வருடங்களுக்குப்பின் மீண்டும் வேலை

## கெலிவத்தை தோட்டம் பற்றி தொழில்கோர்ட் தீர்ப்பு

நாவலப்பிட்டி, வெள்ளி

கடந்த இரண்டு வருடங்களாக பத்தனையைச் சேர்ந்த கெலிவத்தைத் தோட்டத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த மாரியாயி, இருளாயி, முனியம்மா, இலட்சுமி ஆகிய பெண் தொழிலாளர்கள் இம் மாதம் முதல் மீண்டும் வேலை பெற்றனர். இத்தோட்டத்தில் முதலிலிருந்த தோட்டத்துரைக்கும், கணக்கப்பிள்ளைக்கும் பிரஸ்தாப பெண் தொழிலாளர்கள் தொந்தரவு கொடுத்ததே வேலைநீக்கம் செய்யப்பட காரணமென தெரியவருகிறது. பெண் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த கூடு, வெள்ளையன் ஆகிய தொழிலாளர்களும் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலவாக்கொல்லை மாவட்டம் இப்பிரச்னையை தொழிற்கோர்ட்டின் கவனத்திற்கு கொண்டுவந்தது. தொழிற்கோர்ட்டுதீர்ப்பின் படி தொழிலாளர்கள் வேலை பெற்றுள்ளனர். இத்தோட்டத்திலுள்ள இரு கோஷ்டி அங்கத்தவர்களின் குழப்பங்களினால் கடந்த ஐந்து வருடங்களாக தேர்தல் நடைபெறவில்லை.

---

## நாகா தலைவர் காலமானர்

புதுடில்லி, ஆக 24

இருதினங்களுக்கு முன் துப்பாக்கியால் சுடப்பட்ட நாகா தலைவர் டாக்டர் ஆங். ஆஸ்பத்திரியில் இன்று காலமானதாய் அறிவிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 26-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஏ. சங்கரஐயர்-வயலின்

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 அல்வின் தேவகயாம்-பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சுழல், 9-45 பாமாலை, 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 27-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்தஇசை, 8-30 பக்திப் பாடல்கள், 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 முத்துலட்சுமி கயிலாயநாதன் - பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 'தளபதி'-நாடகம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

**சனி 26-8-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நாகர்கோயில் எஸ். அனந்தலக்ஷ்மி - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்சனியமுது, 1-50 குரல்இசை, 2-10 நாகர்கோயில் எஸ். அனந்தலக்ஷ்மி வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7 30 'ஒரேகோப்பை' - நாடகம். 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை. 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி

**ஞாயிறு 27-8-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை - புல்லாங்குழல், 8-15 எஸ். நரஸிமஹலு-பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி : கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கே. ஜே. ஜோஸ் : தில்ரூபா.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 காம்போதி ராக மஞ்சரி, 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.


பி. சீ. சீ. சந்தண சோப்




ஆட்வர்கள் முதல்
ஆரணங்குகள் வரை
பாவிப்பது
நறு மணம் கமழும்
பீ. சீ. சீ.
சந்தண
சோப்பே

யாழ்ப்பாண ஏஜென்ட்ஸ்:
முகம்மது அலி அப்துல் அலி
பெரியகடை, யாழ்ப்பாணம்.



'சிரநேத்திராஞ்சன தைலம்'
விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்
வேண்டுமா?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்:
மு. க. ஜெகநாதன்
யூனனி கண் நிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

**தாமோதர விலாஸ்**

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

**சினிமாஸ் லிமிட்டெட் தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!**

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு) கெப்பிட்டல் (ஆமர் வீதி கொழும்பு)
வெலிங்டன் மனோகரா (யாழ்ப்பாணம்)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (மஸ்கேலியா)
மோடர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)




சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா, சாவித்திரி
நடித்த

**பாவ மன்னிப்பு**

எல்லோரும் குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 4 மணிக்கும் சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

மார்லின் மொன்றோ நடித்த

**ஸம் லைக் இற் ஹொற்**
SOME LIKE IT HOT


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பெல்கிரேட் மகாநாட்டுக்கு பிரதமர் தலைமையில் இலங்கை கோஷ்டி

கொழும்பு, வெள்ளி
பெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டுக்குப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் இலங்கைக் கோஷ்டியினர் ஆகஸ்ட் 29-ந் திகதி பெல்கிரேட் பிரயாணமாவார்கள். நிதிமந்திரி பீலிகஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இம் மகாநாட்டிற் பங்குபற்றுவார்

## கீரிமலைக்கேணி சுத்தம்செய்யப்படும்
### சுகாதார அதிகாரி வாக்குறுதி

மாவிட்டபுரம், வெள்ளி
சுகாதார இலாகா மேலதிகாரி டாக்டர் டபிள்யூ. கருணரத்ன சென்ற வியாழக்கிழமை காலை கீரிமலைக்கு விஜயம்செய்தார். தெல்லிப்பழைக் கிராமச்சங்கத்தால் சுகாதார அதிகாரிக்கு சமூக நிலையமண்டபத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. திரு. கு. கதிரையாண்டி தலைமைவகித்தார்.

தலைவர் தமது வரவேற்புரையில் கீரிமலைக் கேணியை விருத்திசெய்வதற்குச் சுகாதார அதிகாரியின் உதவியைத் தெல்லிப்பழைக் கிராமச் சங்கம் வேண்டி நிற்பதாகத் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறும்போது கீரிமலைக் கேணியில் கணக்கற்றோர் வந்து நீராடுவதால் தண்ணீர் அசுட்தமாகிறதெனவும் இது சுகாதாரத்தைப் பாதிப்பதால் தண்ணீரை அடிக்கடி சுத்தமாக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைத் தாம் செய்வதாகவும் தெரிவித்தார்.

## ஐயாறன்
(4ம் பக்கத் தொடர்ச்சி)

675 ரூத்தல் எடையுள்ளது. முன்னரெல்லாம் மிகச் சிறிய ராக்கட்டுகளையே அவர்கள் அனுப்ப முடிந்தது. தோல்விகள் வெற்றிக்குப்படிகள் என்பர். இந்தத் தோல்வியும் முடிவான வெற்றிக்கு ஒரு படியாக இருக்கலம்.

சந்திரனையோ, சூரியனையோ சுற்றுவது இருக்கட்டும். தக்காளி உள்ளிட்டு மக்கள் பாவிக்கும் பொருள்கள் மெலிவாகக் கிடைக்கும்படி செய்வதே முக்கியம். இரு வல்லரசுகளும் ஒத்துழைப்பதாயின் மக்கள் குலத்துக்கு எவ்வளவு நன்மை?

° ° °

அனுராதபுரத்திலே ஓர் இஞ்சினியருக்குஒரு லட்சம் ரூபாயில் புதியஅரண்மனைகட்டியிருந்ததைப் பற்றி எழுதினேனல்லவா? இனி மக்கள் யாரும் அவ்வித பெரிய அரண்மனைகளைக் கட்டாமல், சிறிய அளவில் வீடு கட்டுவதற்கே அரசாங்கம் கடன் கொடுத்து உதவப் போவதாக ஒரு செய்தியைப் படித்தேன். மக்கள் விஷயம் சரி. அதிகாரிகளுக்கும் பெரிய அரண்மனைகள் கட்டாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள்

ஆஸ்பத்திரி சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:
19 U 0803 ரூ. 66,550-00

இரண்டாது பரிசு:
02 Q 0785 ரூ. 33,275-00

மூன்றுவது பரிசு:
19 M 0743 ரூ. 16,637-50

தலா ரூ. 665-50 பெறும் 25 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 19 E 0199 | 03 Y 0958 |
| 05 D 0774 | 03 K 0282 |
| 07 O 0054 | 17 R 0225 |
| 16 B 0503 | 10 N 0221 |
| 11 F 0794 | 06 P 0091 |
| 09 Y 0618 | 17 O 0216 |
| 11 C 0530 | 12 E 0988 |
| 20 Y 0423 | 04 S 0571 |
| 21 K 0923 | 14 A 0913 |
| 01 S 0452 | 08 Y 0741 |
| 11 U 0360 | 11 P 0234 |
| 12 B 0992 | 13 X 0055 |
| 11 D 0353 | |

## தகவல் பகுதியினரின் தமிழ்ப் படக் காட்சிகள்

கொழும்பு, வெள்ளி
தமிழ்ப் பேசும் மக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ் விமர்சனத்தோடு கூடிய சினிமாப்படக் காட்சியொன்றினை யாழ்ப்பாணத்தின் பல்வேறு முக்கிய இடங்களிலும் தகவல் பகுதியினரால் காண்பிக்கப்படவிருக்கிறது. இந்து சமயத் திருவிழாக்கள், சைவ சித்தாந்த மாநாட்டு நிகழ்ச்சிகள், நல்லூர் கந்தசுவாமி கோவில், கொச்சிக்கடைசிவன் கோவில், தமிழ் விழா, மட்டக்களப்பு நாடகம் ஆகிய காட்சிகள் அடங்கிய அருமையான படைப்பு. முதலியார் குல. சபாநாதனல் எழுதப்பட்ட விசேஷ விமர்சனத்தை பிரபல எழுத்தாளர் இலங்கை வானொலி புகழ் திரு. வி. என். பாலசுப்பிரமணியம் காட்சிக்கேற்பக் கச்சிதமாகத் தந்துள்ளார்.

இம்மாதம் 24-ம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 2-ம் திகதி வரை இப்படக்காட்சி வெவ்வேறு இடங்களில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. தினமும் மாலை 6-30 மணிக்கு காட்சி ஆரம்பிக்கப்படும். திகதிகள் கோவில் அதிகாரிகளின் வசதிக்கேற்ப மாற்றத்துக்குரியன.

24-8-61 நயினுதீவு ஆலயம்.
25-8-61 செல்வச்சந்நிதி, தொண்டமானுறு.
26-8-61 அச்சுவேலி கந்த சுவாமி கோவில்
27-8-61 கரம்பன் மேற்கு சண்முகநாதன் கோவில்
28-8-61 வேலணை மகா வித்தியாலம்
29-8-61 புங்குடுதீவு சிரேஷ்ட பாடசாலை.
30-8-61 நல்லூர் கந்தசுவாமி கோவில்.
31-8-61 குரும்பசிட்டி சன்மார்க்கசபை.
1-9-61 [illegible]ப்பாய் சனசமூக நிலையம்.
2-9-61 வண்ணார்பண்ணை சிவன்கோவில்.

இம்மாதம் 27-ம் திகதிஇரவு 9 மணிக்கு ஊர்காவற்றுறை சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

## உதவித் தலைமைக்காரர்களை நிரந்தரமாக்குக
### பிரதமருக்குச் சங்கம் கோரிக்கை

மாவிட்டபுரம், வெள்ளி
"நாட்டில் சட்டவிரோதக் குடியேற்றத்தை ஒழித்துக் கட்டுவதைப் பிரதான கடமையாக மேற்கொண்டுள்ள உதவிக் கிராமத் தலைமைக்காரர்களால் இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் தனித்தும், பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் உதவியுடனும், தலைமைக்காரர்களின் உதவியுடனும் கைது செய்யப்பட்டனர். எங்களின் சேவைத் திறமையை அரசாங்கம் அறிவதற்கு இது போதிய சான்றாகும்."

இவ்வாறு அகில இலங்கை உதவி கிராமத் தலைமைக்காரர் சங்கத்தின் முதலாண்டு வருடாந்தக் கூட்டம் கீரிமலையில் நடைபெற்றபொழுது சங்கத் தலைவர் திரு. வே. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தற்காலிக சேவையில் ஐந்து ஆண்டுகளாக இருந்து வரும் உதவித் தலைமைக்காரர்களை நிரந்தரமாக்குமாறு பிரதம மந்திரியையும், உள்நாட்டு மந்திரியையும் இச்சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

## தண்ணீர்த் திட்ட....
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவாயை அச்சந்தை இச்சபைக்குக் கொடுக்கும். மின்சார விநியோகமுறை விரைவில் கவனிக்கப்படவேண்டிய ஒரு விஷயம். இவ்விரண்டுக்குமான கடன்கள் மிக அவசியமென்றுஆலோசிக்கப்படவேண்டும்.

மலகூட மேற்பரப்பு, வடிகால் அமைப்புத் திட்டம் பின்போடப்படவேண்டும்.

நிலமானியமாகக் கூடுதலான தொகையைப் பெறுவதற்கு வரியைக் கட்டுவதுடன் அவற்றை வசூலிப்பதற்கும் வழிவகைகளையும் துரிதப்படுத்த வேண்டும்.

தற்சமயம் தண்ணீர் விநியோகம் செய்யும் வீடுகளுக்கு மேலதிகமாக 6 வீத வரி அவர்களிடமிருந்து அறவிடவேண்டுமென்றதொரு தீர்மானத்தை சபை சமீபத்தில் நிறைவேற்றியுள்ளது. இது ஒரு சிறு தொகையாகும். நாங்கள் வசூலிக்கவிருக்கும் வரி விகிதத்தைக் கணிசமாகக் கூட்டவேண்டியது கண்டிப்பாகச் செய்யவேண்டிய ஒன்றாகும்.

# பட்டப்பகலில் இளம் பெண் படுகொலை சந்தேகத்தின்மீது ஒருவர் கைது

யாழ்ப்பாணம், சனி
சிதம்பரம் அன்னம்மாளென்ற 26 வயது இளம் பெண் கொலை செய்யப்பட்டு ஸ்தலத்திலேயே மாண்ட கோரசம்பவமொன்று புங்குடுதீவு கிழக்கில் நேற்று நடைபெற்றதாகத் தெரிகிறது. பாளைக்கத்தி யொன்றினால் வெட்டப்பட்டிருப்பதாகவும் சந்தேகத்தின்மீது முத்தையா இரத்தினம் என்னும் கள்ளிறக்கும் தொழிலாளரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனவும் தெரிகிறது.

இது சம்பந்தமாகப் பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## கல்லோயா பெரும்பிரிவு கூட்டுறவு வங்கி

அக்கரைப்பற்று, வெள்ளி
அம்பாரையிலுள்ள கல்லோயாப் பெரும்பிரிவுக் கூட்டுறவு வங்கியின் மூன்றுவது வருடாந்த பொதுக்கூட்டம் கல்லோயா அபிவிருத்திச்சபையின் பதில் ஸ்தலஅதிபர் திரு. எம். சி. ஏபிரகாம் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கல்லோயாப் பெரும்பிரிவு கூட்டுறவு வங்கியை மக்கள் வங்கியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதுபற்றி அம்பாரை மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. ஆர். அபயரெத்தின குறிப்பிட்டார்.

குறித்த வங்கியின் சகல விதமான செலவுகளும் தவிர 1958-59, 1959-60 ம், வருட சுத்த ஆதாயம் 87,717 ரூபா 23 சதமென சபைக்கு சமர்ப்பிக்சப்பட்டது. பிரஸ்தாப ஆதாயத்தில் வங்கியின் அங்கத்தவர்களுக்கு ஆறு வீத பணம் பகிர்ந்து கொடுப்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.